பக்கங்கள்:-23

காலை முரசு

## சட்டமா அதிபருக்கு அரசால் அழுத்தம்

### கம்மன்பில குற்றச்சாட்டு

“அரசியல் பழி வாங்கலுக்காக அரசு நீதிக்கட்டமைப்பையும் பயன்படுத்துகின்றது. சட்டமா அதிபருக்கு அரசு 06



முழக்கம்: 02 | வள்ளுவர் ஆண்டு 2056 | தை 28 | ஞாயிற்றுக்கிழமை | 09.02.2025 | அதிர்வு 191



# தையிட்டி சர்வாதிகார விகாரை கட்டாயம் இடிக்கப்பட வேண்டும்

## தமிழரசுக் கட்சியின் எம்.பி. சிறீதரன் வலியுறுத்து மக்கள் போராட்டத்துக்கும் முழு ஆதரவு தெரிவிப்பு

(எஸ்.நிதர்ஷன்)

“மக்களின் விருப்புக்கு மாறாக சட்டவிரோதமாக தையிட்டியில் நிர்மாணிக்கப்பட்டுள்ள சர்வாதிகார விகாரை இடிக்கப்பட வேண்டும்” - என்று வலியுறுத்திய இலங்கைத் தமிழரசுக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன், இது இனவாதக் கருத்தல்ல என்றும் சுட்டிக்காட்டினார்.

“அனைவருக்கும் சட்டம் சமனானது எனக் கூறும் இன்றைய அரசு தனது நிலைப்பட்டில் இருந்து படிப்படியாக மாறி தனது சுய நிலைக்கு வருகின்றது.” - என்றும் அவர் குறிப்பிட்டார். 06

# மாகாண சபைத் தேர்தல் பற்றி அரசியல் கட்சிகளுடன் பேச்சு

## தேர்தல் ஆணைக்குழுவின் தலைவர் அறிவிப்பு




“மாகாண சபைத் தேர்தல் தொடர்பில் அரசியல் கட்சிகளுடன் நடத்தவுள்ளோம். உள்ளூராட்சி மன்ற அதிகார சபைகள் (விசேட ஏற்பாடுகள்) சட்டமூலம் தொடர்பில் உயர்நீதிமன்றத்தின் தீர்மானத்தை அடிப்படையாகக் கொண்டே உள்ளூராட்சி மன்றத் தேர்தல் வாக்கெடுப்புத் திகதியை நிர்ணயிக்க முடியும்.”

– இவ்வாறு தேர்தல்கள் ஆணைக் குழுவின் தலைவர் ஆர்.எம்.ஏ.எல்.ரத்நாயக்க தெரிவித்தார்.

உள்ளூராட்சி மன்றத் தேர்தல் குறித்து ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் 06




இலங்கைத் தமிழரசுக் கட்சியின் வழக்கு வரும் வியாழக்கிழமை 13 ஆம் திகதி திருகோணமலை மாவட்ட நீதிமன்றத்தில் மீண்டும் எடுத்துக் கொள்ளப்பட இருக்கின்றது.

இந்த வழக்கை இணக்கமாக – சுமுகமாக – தீர்த்து வைப்பதற்கான வாய்ப்புகள் குறித்து ஆராய்வதற்காகவே இந்த 13ஆம் திகதி இந்த வழக்கு நீதிமன்றத்தில் எடுக்கப்படுவதாக அறிவிக்கப்பட்டிருந்தாலும், இணக்கத்திற்கான சாத்தியங்கள் அருகி விட்டன என்றே தோன்றுகின்றது.

இத்தகைய வழக்குத் தாக்கலாவதற்கான சூழ்நிலை தோன்றிய போதே, இப்படி வழக்குக்கு விடயம் போனால் இந்த விவகாரம் ஓரிரண்டு வருடங்கள் இழுபடும், அதனால் இவ்விடயத்தை முற்கூட்டியே சுமுகமாகத் தீர்த்துக் கொள்ளத் தரப்புகள் முன்வர வேண்டும் என்று இப்பத்தியில் திரும்பத் திரும்ப வலியுறுத்திக் குறிப்பிட்டு வந்தேன். ஆனால் தரப்புகள் கேட்கவில்லை. விவகாரம் நீதிமன்றுக்கு போய்விட்டது.

போன பின்னரும், அந்தக் 06

# டுபாயிலிருந்து அழைத்துவரப்பட்ட சந்தேகநபர்கள் இருவருக்கு தடுப்புக் காவல்



டுபாயில் கைது செய்யப்பட்டு நாட்டுக்கு அழைத்துவரப்பட்ட சந்தேகநபர்களில் இருவரை தடுத்து வைத்து விசாரணைக்கு உட்படுத்தும் உத்தரவு பெறப்பட்டுள்ளது.

ரொட்டும்ப உபாலி என அழைக்கப்படும் சந்தேகநபர் 07 நாள்கள் தடுத்து வைத்து விசாரணைக்கு உட்படுத்தப்படவுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

கொலன்னாவை சந்தன என அழைக்கப்படும் பிரதீப் சந்தருவன் எனும் சந்தேகநபரை 72 மணித்தியாலங்கள் தடுத்து வைத்து விசாரணைக்கு உட்படுத்துவதற்கான உத்தரவு பெறப்பட்டுள்ளது.

ரண்முனி மகேஷ் ஹேமந்த சில்வா என்ற சந்தேகநபரும் நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்தப்படவுள்ளார்.



# கிரிஷ் கட்டடத்தில் ஏற்பட்ட தீ பரவல் குறித்து விசாரணை

கொழும்பு கிரிஷ் கட்டடத்தில் ஏற்பட்ட தீப்பரவல் அதன் ஊழியர்களினால் இரும்புகளை வெட்டுவதற்காகப் பயன்படுத்தப்படும் கேஸ் கட்டர் காரணமாக இடம்பெற்றிருக்கலாம் என சந்தேகிக்கப்படுவதாக கொழும்பு மாநகர சபையின் தீயணைப்பு சேவை திணைக்களம் தெரிவிக்கின்றது.

இது குறித்து தொடர்ந்தும் விசாரணை முன்னெடுக்கப்பட்டுள்ளதாக அதன் பிரதானி பீ.டீ.கே.ஏ. வில்சன் கூறினார்.

இந்த சம்பவம் தொடர்பில் விடயங்களை அறிந்து கொள்வதற்காக அந்த நிறுவனத்தின் பாதுகாப்பு அதிகாரிகள் அழைக்கப்பட்டுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார்.

கொழும்பு கிரிஷ் கட்டத்தில் இரண்டு சந்தர்ப்பங்களில் ஏற்பட்ட தீப்பரவல் தொடர்பான விசாரணைகளுக்காக 2 பொலிஸ் குழுக்கள் ஈடுபடுத்தப்பட்டுள்ளன.

தீப்பரவல் தொடர்பில் அரச இரசாயனப் பகுப்பாய்வாளர் பரிசோதனைகளை மேற்கொள்வாரென பொலிஸ் ஊடகப் பேச்சாளர் தெரிவித்தார்.

கொழும்பு கோட்டை கிரிஷ் கட்டடத்தை அண்மித்து தற்போது பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளது.

20 பொலிஸ் அதிகாரிகள் இதற்காக கடமையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளதாக அமைச்சர் ஆனந்த விஜேபால குறிப்பிட்டார்.

நிர்மாணிக்கப்பட்டுவரும், கொழும்பு கோட்டை க்ரிஷ் கட்டிடத்தில் கடந்த வியாழன் மற்றும் வெள்ளி கிழமைகளில் தீப்பரவல் ஏற்பட்டது.

கிரிஷ் கட்டடத்தின் 24 ஆவது மாடியில் இரண்டாவது நாளாக நேற்று முன்தினம் தீப்பரவல் ஏற்பட்டு கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரப்பட்டதுடன் அதற்காக 06 தீயணைப்பு வாகனங்கள் பயன்படுத்தப்பட்டன.

கிரிஷ் கட்டடத்தின் 35 ஆவது மாடியில் தீப்பரவல் ஏற்பட்டதுடன் 34 ஆவது மாடி வரை தீ பரவியிருந்தது.

பல மணித்தியால போராட்டத்தின் பின்னர் தீ கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரப்பட்டது.

# பொலிஸ் அதிகாரிகளுக்கு 12 ஆம் திகதி இடமாற்றம்




பொலிஸ் விசேட அதிரடிப்படையின் கட்டளை அதிகாரி, சிரேஷ்ட பிரதிப் பொலிஸ் மாஅதிபர் சட்டத்தரணி வருண ஜயசுந்தர உள்ளிட்ட 06 பொலிஸ் அதிகாரிகளுக்கு இடமாற்றம் வழங்கப்பட்டுள்ளது.

தேசிய பொலிஸ் ஆணைக்குழுவின் அனுமதிக்கமைய எதிர்வரும் 12 ஆம் திகதி முதல் அமுலாகும் வகையில் இடமாற்றங்கள் வழங்கப்பட்டுள்ளன.

பொலிஸ் விசேட அதிரடிப்படையின் கட்டளை அதிகாரியாக செயற்பட்ட சிரேஷ்ட பிரதிப் பொலிஸ் மாஅதிபர் சட்டத்தரணி வருண ஜயசுந்தர, கிழக்கு மாகாணத்திற்குப் பொறுப்பான சிரேஷ்ட பிரதிப் பொலிஸ் மாஅதிபராக இடமாற்றப்பட்டுள்ளார்.

பொலிஸ் விசேட அதிரடிப்படையின் புதிய கட்டளை அதிகாரியாக கடமைகளை நிறைவேற்றுவதற்காக பிரதிப் பொலிஸ் மாஅதிபர் டி.ஜி.எஸ்.டி சில்வா நியமிக்கப்பட்டுள்ளார்.

அவர் இதற்கு முன்னதாக கிளிநொச்சி மற்றும் முல்லைத் தீவு பிராந்தியத்துக்குப் பொறுப்பான பிரதிப் பொலிஸ் மா அதிபராக செயற்பட்டார்.

சிரேஷ்ட பிரதிப் பொலிஸ் மாஅதிபர் டபிள்யூ.கே. ஜயலத் தென் மாகாணத்திற்குப் பொறுப்பான சிரேஷ்ட பிரதிப் பொலிஸ் மாஅதிபராக இடமாற்றப்பட்டுள்ளார்.

அவர் இதற்கு முன்னதாக வடமேல் மாகாணத்திற்குப் பொறுப்பான சிரேஷ்ட பிரதிப் பொலிஸ் மாஅதிபராக செயற்பட்டார்.

கிழக்கு மாகாணத்திற்குப் பொறுப்பான சிரேஷ்ட பிரதிப் பொலிஸ் மாஅதிபராக செயற்பட்ட கே. அஜித் ரோஹண வடமேல் மாகாணத்திற்குப் பொறுப்பான சிரேஷ்ட பிரதிப் பொலிஸ் மாஅதிபராக இடமாற்றப்பட்டுள்ளார்.

ஊவா மாகாணத்திற்குப் பொறுப்பான புதிய சிரேஷ்ட பிரதிப் பொலிஸ் மாஅதிபராக எஸ்.டபிள்யூ.எம். சேனாரத்ன நியமிக்கப்பட்டுள்ளார்.

அவர் இதற்கு முன்னதாக தென் மாகாணத்திற்குப் பொறுப்பான சிரேஷ்ட பிரதிப் பொலிஸ் மா அதிபராக செயற்பட்டார்.

ஊவா மாகாணத்திற்குப் பொறுப்பான சிரேஷ்ட பிரதிப் பொலிஸ் மாஅதிபராக செயற்பட்ட யூ.பீ.ஏ.டீ.கே.பீ. கருணாநாயக்க விசேட பாதுகாப்புப் பிரிவுக்குப் பொறுப்பான சிரேஷ்ட பிரதிப் பொலிஸ் மாஅதிபராக இடமாற்றப்பட்டுள்ளார்.

வவுனியா மற்றும் மன்னார் பிராந்தியங்களுக்குப் பொறுப்பான பிரதிப் பொலிஸ் மாஅதிபராகக் கடமையாற்றும் எஸ்.டீ விஜேசேகர அந்த கடமைகளுக்கு மேலதிகமாக கிளிநொச்சி மற்றும் முல்லைத்தீவு பிராந்தியங்களுக்குப் பொறுப்பான பிரதிப் பொலிஸ் மாஅதிபராகவும் செயற்படவுள்ளதாக பொலிஸ் ஊடகப்பிரிவு அறிவித்துள்ளது.

CLEAN SRI LANKA

SOCIALLY · ENVIRONMENTALLY · ETHICALLY

# கிளீன் சிறீலங்கா வேலைத்திட்டத்திற்கு ஜப்பான் 300 மில்லியன் யென்கள் நன்கொடை

கிளீன் சிறீலங்கா வேலைத்திட்டத்திற்கு ஜப்பான் 300 மில்லியன் யென்களை நன்கொடையாக வழங்கியுள்ளது.

கழிவுகளை போக்குவரத்து செய்வதற்காக பயன்படுத்தப்படும் 28 புதிய கொம்பெக்டர் வாகனங்கள் இந்த திட்டத்தின் கீழ் நாட்டுக்கு கிடைத்துள்ளதாக நிதித் திட்டமிடல் மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சு தெரிவித்துள்ளது.

மேற்படி வாகனங்கள், மேல், வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில், உள்ளூராட்சி மன்றங்களின் கழிவு முகாமைத்துவ கட்டமைப்பின் திறனை அதிகரிப்பதற்காக பயன்படுத்தப்படவுள்ளன.

இதற்கான பரிமாற்றல் ஆவணங்களில் கையெழுத்திடும் நிகழ்வு நிதியமைச்சில் அண்மையில் நடைபெற்றது.

# நீர் கட்டண குறைப்பு தொடர்பில் இறுதித் தீர்மானம் விரைவில்!

நீர் கட்டணக் குறைப்பு தொடர்பான இறுதி முடிவு இரண்டு வாரங்களுக்குள் அறிவிக்கப்படும் என நகர அபிவிருத்தி, நிர்மாணத்துறை மற்றும் வீடமைப்பு அமைச்சர் அனுர கருணாதிலக்க தெரிவித்துள்ளார்.

குறைந்த அளவில் நீரைப் பயன்படுத்துபவர்களுக்கு அதிக நன்மைகளை வழங்குவதே நீர் கட்டணக் குறைப்பின் நோக்கம் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை, மின்சாரக் கட்டணக் குறைப்புடன் ஒப்பிடுகையில் நீர் கட்டணத்தைக் குறைக்க முடியாது என்ற போதிலும், மக்களுக்கு நிவாரணம் வழங்குவது தொடர்பில் தேசிய நீர்வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபை அவதானம் செலுத்துவதாக அதன் தலைவர் தீப்த சமரசேகர முன்னதாக தெரிவித்திருந்தார்.

நீர் கட்டணக் குறைப்பு குறித்து ஆராய்வதற்காக அண்மையில் குழுவொன்று நியமிக்கப்பட்டது.

அந்த குழுவின் அறிக்கை இந்த வாரத்திற்குள் கிடைக்கப்பெறும் என எதிர்பார்க்கப்படுகிறது.



இந்த அறிக்கை கிடைத்ததன் பின்னர் அதனை விடயத்துக்குப் பொறுப்பான அமைச்சரிடம் சமர்ப்பித்து, நீர் கட்டணம் குறைக்கப்படும் சதவீதம் தொடர்பில் அறிவிக்கப்படும் எனவும் நீர்வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபையின் தலைவர் தீப்த சமரசேகர முன்னதாக தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

# அரச பணியாளர்களுக்கு சம்பள உயர்வு வழங்கப்படும்: பிரதமர்

எதிர்காலத்தில் அரச பணியாளர்களுக்கு சம்பள உயர்வு வழங்கப்படும் எனவும் கல்வி மறுசீரமைப்புக்கான யோசனைகள் மற்றும் பரிந்துரைகளை சமர்ப்பிப்பதற்கு அனைவருக்கும் வாய்ப்பு வழங்கப்படும் எனவும் பிரதமர் ஹரிணி அமரசூரிய தெரிவித்துள்ளார்.

பிரதமர் மற்றும் ஆசிரியர் அதிபர் தொழிற்சங்க கூட்டணியினருக்கு இடையே நேற்று அலரி மாளிகையில் நடைபெற்ற கலந்துரையாடலின் போதே அவர் இதனைக் குறிப்பிட்டார்.

கல்வித் துறையிலும், ஆசிரியர், அதிபர் மற்றும் ஆசிரியர் ஆலோசகர் போன்ற சேவைகளிலும் உள்ள பல பிரச்சினைகள் குறித்து இதன்போது கலந்துரையாடப்பட்டுள்ளன.

இந்த சேவைகளில் பதவி உயர்வுகள், வேதன முரண்பாடுகள், தொழில்முறை பிரச்சினைகள், ஆசிரியர் அதிபர் சேவையில் முறையான இடமாற்றங்கள், மாணவர்களைச் சேர்ப்பதற்காக நிதி வசூலித்தல், தேசிய பாடசாலைகளில் அதிபர் வெற்றிடங்களுக்கு ஆட்சேர்ப்பு,புதிய கல்வி சீர்திருத்தங்கள் மற்றும் பிரிவெனா அமைப்பில் உள்ள சிக்கல் சூழ்நிலைகளைத் தீர்ப்பது உள்ளிட்ட பல பிரச்சினைகள் குறித்தும் கலந்துரையாடப்பட்டுள்ளது.



வெற்றிடங்கள் இல்லாத பாடசாலைகளில் மாணவர்கள் சேர்க்கப்படுவதைத் தடுப்பதற்காக நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும் பிரதமர் தெரிவித்துள்ளார்.

கல்வி அமைச்சு இதற்காக கடிதங்களை வெளியிடுவதில்லை எனவும், எதிர்காலத்தில் ஆசிரியர்கள் உட்பட அனைத்து அரச பணியாளர்களின் வேதனத்தை அதிகரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் பிரதமர் ஹரிணி அமரசூரிய தெரிவித்துள்ளார்.

# வாந்தி எடுத்த நிலையில் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்ட இ.போ.ச. பஸ் சாரதி உயிரிழப்பு!

(எஸ்.ரகுதீஸ்)

வாந்தி எடுத்த நிலையில் யாழ். போதனா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்ட ஒரு பிள்ளையின் தந்தை ஒருவர் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார்.

தாவடி தெற்கு, கொக்குவிலைச் சேர்ந்த திரவியம் சிறிதரன் (வயது 53) என்பவரே உயிரிழந்தவர் ஆவார்.

இ.போ.சபையின் கோண்டாவில் சாலையில் சாரதியாகக் கடமையாற்றும் அவர் நேற்றுமுன்தினம் வெள்ளிக்கிழமை காலை சாலைக்கு வேலைக்குச் சென்றபோது தலைச்சுற்று ஏற்பட்டதன் காரணமாக வீட்டுக்கு வந்துள்ளார்.

பின்னர் வீட்டில் வாந்தி எடுத்த நிலையில் யாழ். போதனா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்ட நிலையில் மாலை அங்கு உயிரிழந்துள்ளார்.

இந்த மரணம் தொடர்பில் நேற்று சனிக்கிழமை யாழ்.



திடீர் மரண விசாரணை அதிகாரி ஆறுமுகம் ஜெபாலசிங்கம் விசாரணைகளை மேற்கொண்டார். சாட்சிகளை சுன்னாகம் பொலிஸார் நெறிப்படுத்தினர்.

# அஸ்வெசும சிறந்த திட்டம் என்று கூறுவதை ஏற்றுக் கொள்ள முடியாது

## சஜித் பிரேமதாஸ தெரிவிப்பு



"வறுமை நிலை தொடர்பில் எவ்வித புரிதலும் இன்றி அஸ்வெசும திட்டத்தின் வெற்றி குறித்து எவ்வாறு தீர்மானிக்க முடியும்? வறுமையை ஒழிப்பதற்கு முன்னர் காணப்பட்ட திட்டங்களை விட அஸ்வெசும சிறந்ததெனக் கூறுவதை என்னால் ஏற்றுக் கொள்ள முடியாது."

– இவ்வாறு எதிர்க்கட்சி தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்துள்ளார்.

"எதிர்காலத்துக்கான பட்ஜெட்" என்ற தொனிப்பொருளில் நேற்று முன்தினம் கொழும்பில் இடம்பெற்ற மாநாடொன்றில் கலந்து கொண்ட போதே எதிர்க்கட்சி தலைவர் இவ்வாறு தெரிவித்துள்ளார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

"தற்போதுள்ள வறுமை நிலை தொடர்பில் எவ்வித புரிதலும் இன்றி அஸ்வெசும திட்டத்தின் வெற்றி குறித்து எவ்வாறு தீர்மானிக்க முடியும்? வறுமை நிலை தொடர்பில் சரியான தரவுகள் அரசாங்கத்திடமும் இல்லை.

வறுமை நிலை அதிகரித்தமை தொடர்பில் சர்வதேச நிறுவனமொன்று தரவுகளை வெளியிட்டிருந்தது. அதற்கமைய மூன்றில் ஒரு பகுதி மக்கள் வறுமையிலிருப்பதாகக் கூறப்பட்டது.

அந்த வகையில் முன்னர் காணப்பட்ட வறுமை நிலைமையை ஒழிப்பதற்கான வேலைத்திட்டங்களை விட, அஸ்வெசும வேலைத்திட்டம் சிறந்தது எனக் கூறுவதை என்னால் ஏற்றுக் கொள்ள முடியாது.

காரணம் அது திட்டமிடலற்ற, பெருமளவில் அரசியல் மயமாக்கப்பட்ட, தொழிநுட்ப அடிப்படையிலன்றி, தரவுகள் இன்றி நடைமுறைப்படுத்தப்பட்ட திட்டமாகும்." – என்றார்.

## கால்நடைகளுக்கான மருந்து விலை தொடர்பில்

# வடக்கு மாகாண கால்நடை உற்பத்தி சுகாதாரப் பணிப்பாளரின் அறிவித்தல்



வடக்கு மாகாணத்திலுள்ள அனைத்து கால்நடை வைத்திய அலுவலகங்களிலும் கால்நடைகளுக்கான பெரும்பாலான மருந்துகளை அதன் உச்சபட்ச சில்லறை விலையைவிட 10 சதவீதம் குறைவாகப் பெற்றுக்கொள்ள முடியும் என வடக்கு மாகாண கால்நடை உற்பத்தி சுகாதாரத் திணைக்களத்தின் பணிப்பாளர் வைத்திய கலாநிதி எஸ்.வசீகரன் தெரிவித்தார்.

2000ஆம் ஆண்டு காலப்பகுதிகளிலும் கால்நடை வைத்திய அலுவலகங்களில் கால்நடைகளுக்கான மருந்துகள் விற்பனை செய்யப்பட்டன. ஆனாலும், அந்த நடைமுறை சில காரணங்களால் பின்னர் நிறுத்தப்பட்டது. எனினும், வடக்கு கிழக்கு தவிர்ந்த ஏனைய பெரும்பாலான மாகாணங்களில் இன்றும் அரச கால்நடை வைத்திய அலுவலகங்களூடாக கால்நடைகளுக்கான பல்வேறு மருந்துவகைகளும் நியாயமான விலைகளில் விற்பனை செய்யப்பட்டு வருகின்றன.

பண்ணையாளர்களின் சிரமங்களைக் குறைக்கும் வகையில் சில கால்நடை வளர்ப்போர் கூட்டுறவுச் சங்கங்கள் ஊடாக மருந்துகள் விற்பனை செய்யப்பட்டன. அது தொடர்பில் தொடர்ச்சியாகப் பண்ணையாளர்களால் முறைப்பாடுகள் முன்வைக்கப்பட்டிருந்தன.

இந்தநிலையில், கடந்த சில மாதங்களுக்கு முன்னர் அரச கால்நடை வைத்தியர்கள் வடக்கு மாகாண ஆளுநர் நா.வேதநாயகனைச் சந்தித்து பண்ணையாளர்கள் மருந்துகளைப் பெறுவதிலுள்ள சிரமங்கள் தொடர்பாக வலியுறுத்தியிருந்தனர். இதனைத் தொடர்ந்து இந்தப் பிரச்சினை தொடர்பில் ஆளுநர் மற்றும் பிரதம செயலர் ஆகியோரால் வழங்கப்பட்ட பணிப்புரைகளுக்கமைய மாகாணப் பணிப்பாளர் அலுவலகத்தால் முன்வைக்கப்பட்ட கோரிக்கை ஆளுநரால் அனுமதிக்கப்பட்டதன் அடிப்படையில் விசேட நிதி ஒதுக்கப்பட்டு கால்நடை மருத்துவர்களின் கோரிக்கைப் படி தெரிவு செய்யப்பட்ட அவசியமான மருந்து வகைகள் கொள்வனவு செய்யப்பட்டு சகல கால்நடை வைத்திய அலுவலகங்களுக்கும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

இதன் மூலம் பண்ணையாளர்களின் மருந்துத் தேவைகளை அலுவலகங்களிலேயே நிவர்த்தி செய்யவும் குறைந்த விலையில் மருந்துகளைப் பெற்றுக்கொள்ளவும் வாய்ப்பு ஏற்படுத்தப்பட்டுள்ளது.

இந்த வசதியை பெப்ரவரி மாதம் முதல் பண்ணையாளர்கள் பெற்றுக்கொள்ள முடியும். இவற்றை சில்லறை விலையை விட 10 சதவீதம் குறைவாகப் பெற்றுக்கொள்ளவும் முடியும். இது தொடர்பான விலைப்பட்டியல் கால்நடை வைத்திய அதிகாரிகள் பணிமனையில் காட்சிப்படுத்தப்பட ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன என்றும் பணிப்பாளர் வைத்திய கலாநிதி எஸ்.வசீகரன் குறிப்பிட்டார்.

இவ்வாறான ஏற்பாடுகள் குறித்து ஆளுநர் மற்றும் பிரதம செயலர் ஆகியோர் திணைக்களத்துக்கு தமது முழுமையான ஆதரவை வழங்குவதாகத் தெரிவித்துள்ளனர்.

## இரகசியம் பரகசியம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

கட்டத்தில் சுமுகமாக விவகாரத்தைத் தீர்ப்பதற்கு இணக்கம் காணப்படாவிட்டால் மேலும் ஓரிரண்டு வருடங்கள் விவகாரம் தள்ளிப் போவதைத் தவிர்க்க முடியாது என்றும் சுட்டிக்காட்டி வந்தேன்.

இப்போது எனது அந்தக் கருத்துத் தான் நடைமுறையில் நடக்கப் போகின்றது என்பதை மன வருத்தத்தோடு சுட்டிக்காட்ட வேண்டிய நிலைமைதான் உள்ளது.

இணக்கத்திற்கான ஏற்பாடுகள் தொடர்பில் எதிராளிகளான சிறிதரன் எம்.பி., குகதாசன் எம்.பி., முன்னால் எம்.பியான யோகேஸ்வரன் ஆகியோர் சார்பில் முன்வைக்கப்பட்டிருக்கும் திட்டம், வழக்கு இணக்கம் காணப்படாமல் நீதிமன்றத்தில் வழக்காடியே முடிவு தீர்மானிக்கப்பட வேண்டிய திசையை நோக்கி வழக்கை நகர்த்துவதாகத் தெரிகின்றது.

திருகோணமலையில் கடந்த வருடம் நடந்து முடிந்த கட்சியின் தேசிய மாநாட்டுக்கு முந்தியதான பொதுச் சபை கூட்டத்தில் 350 பேர் வரை பிரதிநிதிகளாகப் பங்கு பற்றி வாக்களித்தமை தவறு என்று தெரிவித்தே இந்த வழக்குத் தாக்கல் செய்யப்பட்டது என்பது தெரிந்ததே.

வழக்காளியின் அந்த நிலைப்பாட்டை முழுமையாக ஏற்று, எல்லா விடயங்களையும் ஆரம்பத்தில் இருந்தே புதிதாகச் செய்வதற்கு தயார் என்று வழக்கின் தொடக்கத்தில் குறிப்பிட்ட சிறிதரன், குகதாசன், யோகேஸ்வரன் ஆகிய மூன்று வழக்காளிகளும் இப்போது இணக்கமான தீர்வுக்கு முன்வைக்கும் யோசனை அதற்கு மாறானதாக உள்ளது.

326 பொதுச் சபை உறுப்பினர்களும் மீண்டும் வாக்களித்து தலைவர், செயலாளர் பதவிகள் உட்பட எல்லாப் பிரிவுகளையும் பழைய ஒழுங்கில் முன்னெடுக்கலாம் என்ற திட்டத்துக்கே அவர்கள் இப்போது இணக்கம் தெரிவித்து இருக்கிறார்கள்.

இந்த விடயத்தைத் தான் வழக்காளி தமது வழக்குக்கான பிரதான விவகாரமாக முன் வைத்திருந்தார்.

156 பொதுச் சபை உறுப்பினர்களே வாக்களித்து புதிய நிர்வாகிகளை தெரிவு செய்ய வேண்டிய இடத்தில் அதற்கு மாறாக சுமார் 350 பேர் பொதுச் சபை உறுப்பினர்களாக பங்கு பற்றி, புதிய தலைவரைத் தேர்ந்தெடுத்தமை தவறு என்ற அடிப்படையிலேயே இந்த வழக்குத் தாக்கல் செய்யப்பட்டிருக்கின்றது.

இந்தப் பின்புலத்தில் அந்தப் பிரதான விடயத்தையே வாதத்துக்குரியதாக முக்கிய எதிராளிகள் முன் வைத்திருப்பதால், இனி வழக்கு சமரசமாகத் தீர்க்கப்படுவதற்கு - இணக்கமாக முடிவுறுத்தப்படுவதற்கு - சாத்தியம் இல்லை என்றே தோன்றுகின்றது.

இரு தரப்புக்களும் சுமுகமாக - இணக்கமாக - பேசி பிரச்சினையைத் தீர்ப்பதைத் தவிர்த்து, வாதாடிப் பார்ப்போம் என்ற நிலையை நோக்கி நகர்ந்து விட்டமையையே இப்போது அவர்கள் எடுத்துள்ள நிலைப்பாடு தெளிவுபடுத்துகிறது.

எனவே தமிழரசுக் கட்சி வழக்கு நிச்சயமாக அடுத்த இரண்டொரு வருடங்களுக்கு இனிமேல் நீடித்தாலும் அதில் ஆச்சரியம் இருக்கப் போவதில்லை. இப்போதைய இடைக்கால நிலைமை மேலும் ஓரிரு வருடங்களுக்கு நீடிக்கப் போகிறது.

இதற்கிடையில் தமிழரசுக் கட்சியின் தற்போதைய மத்திய குழு வரும் 16ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை மட்டக்களப்பு களுவாஞ்சிக்குடியில் நாடாளுமன்ற உறுப்பினர் சாணக்கியனின் இல்லத்தில் கூட விருக்கின்றது.

இந்த மத்திய குழு கூட்டம் எட்டாம் தேதி நடைபெறுவதாக இருந்தது. எனினும் கட்சியின் மூத்த தலைவர் மாவை சேனாதிராஜாவின் மறைவையொட்டி அது பிற்போடப் பட்டிருந்தது. அதுவே 16ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை நடைபெற உள்ளது.

---

## தையிட்டி சர்வாதி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

சமகால அரசியல் தொடர்பில் யாழ். ஊடக அமையத்தில் நேற்று சனிக்கிழமை நடைபெற்ற ஊடக சந்திப்பில் இவ்வாறு தெரிவித்த சிறீதரன் எம்.பி. மேலும் தெரிவிக்கையில்,

"தையிட்டி விகாரை விவகாரம் இன்று தமிழ் மக்களின் இருப்புக்குச் சவாலாக மாறியுள்ளது. மக்களின் காணி அவர்களுக்கே உரியது. ஆனால், இன்று அது மறுக்கப்படுவதாகத் தெரிகின்றது.

நீண்ட காலமாக இராணுவத்தினரது பிடிக்குள் இருந்த எமது மக்களின் காணிகளில் அவர்களுக்குத் தெரியாமலேயே இந்த விகாரை நிர்மாணிக்கப்பட்டுள்ளது.

அரசினதும் பௌத்த கட்டமைப்பினதும் இந்த அதிகார இறுமாப்பு எவ்வகையிலும் ஏற்றுக்கொள்ளத்தக்கதொன்றல்ல.

அதனால் குறித்த காணி நிலங்களின் உரிமையாளர்கள் தமக்கான நியாயம் கேட்டு நீண்ட காலமாகப் போராடி வருகின்றனர்.

ஆனாலும் அது இதுவரை நிறைவேறாத நிலையில் அண்மையில் யாழ்ப்பாணம் மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் ஜனாதிபதி முன்னிலையில் பல முரணான கருத்துக்கள் கூறப்பட்டு திசைதிருப்பும் முயற்சியொன்று உருவாக்கப்பட்ட நிலையில் அதற்குக் கடும் எதிர்ப்பும் காட்டப்பட்டது.

அதேநேரம் இலங்கையின் வேறு சில பகுதிகளில் இந்துக் கோயில்கள் சில இன முரண்பாட்டை உருவாக்கும் என்ற தோரணையில் இடிக்கப்பட்டும் இருக்கின்றன.

அதனால் நாட்டில் வாழும் அனைத்து தரப்பினருக்கும் ஒரே சட்டம் என்று கூறும் இந்த அரசு இந்த விகாரையையும் இன முரண்பாட்டை உருவாக்கும் ஒன்றாகக் கருதி இடிப்பது அவசியம்.

அத்தோடு விகாரையின் சுற்றுப்புறத்திலுள்ள வேறு சில மக்களின் காணி நிலங்களும் சட்டவிரோதமாகப் பறிக்கப்படும் அபாயம் ஏற்பட்டுள்ளது.

இந்நிலையில், அந்த பகுதி மக்கள் எதிர்வரும் 12 ஆம் திகதியற்று பெரும் எதிர்ப்புப் போராட்டம் ஒன்றை முன்னெடுக்கப் பல்சார் தரப்பினரிடமும் ஆதரவைக் கோரியுள்ளனர்.

அந்தவகையில் மக்களின் உணர்வுகளுக்கு வலுச்சேர்க்க குறித்த போராட்டத்துக்கு எமது ஆதரவை நாம் வழங்கவுள்ளோம்." - என்றார்.

---

## தெரிவித்ததாவது:-

"உள்ளூராட்சி மன்றத் தேர்தலுக்குப் புதிதாக வேட்புமனுக்களைக் கோரவுள்ளதால் ஆரம்பத்தில் இருந்து தேர்தலுக்கான பணிகளை முன்னெடுக்க வேண்டும். தேர்தல் பணிகளுக்குத் தேவையான நிதி திறைசேரியால் ஒதுக்கப்பட்டுள்ளது. ஆகவே, நிதி நெருக்கடி ஏதும் ஏற்படாது.

உள்ளூராட்சி அதிகார சபைகள் (விசேட ஏற்பாடுகள்) சட்டமூலம் தொடர்பில் உயர்நீதிமன்றத்தில் அடிப்படை உரிமை மீறல் மனுக்கள் தாக்கல் செய்யப்பட்டு தற்போது அவை விசாரணைகளுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டுள்ளன.

உயர்நீதிமன்றத்தின் தீர்மானத்தை அடிப்படையாகக் கொண்டே உள்ளூராட்சி மன்றத் தேர்தல் வாக்கெடுப்பு திகதியை நிர்ணயிக்க முடியும்.

வேட்புமனுக்கள் தாக்கல் செய்வதற்கும், தேர்தல் பிரசாரங்களை மேற்கொள்வதற்கும் போதுமான கால அவகாசம் வழங்கப்பட வேண்டும். ஆகவே, உள்ளூராட்சி மன்றத் தேர்தல் ( விசேட ஏற்பாடுகள்) சட்டமூலம் நிறைவேற்றப்பட்டவுடன் உறுதியான தீர்மானத்தை எடுக்க முடியும்.

மாகாண சபைத் தேர்தல் சட்டத்தில் காணப்படும் சிக்கல்களுக்குத் தீர்வு காண வேண்டிய பொறுப்பு நாடாளுமன்றத்துக்கு உண்டு என்பதைத் தொடர்ச்சியாக வலியுறுத்தியுள்ளோம். தேர்தல் முறைமை தொடர்பான நாடாளுமன்றத் தெரிவுக்குழுக்களில் கலப்புத் தேர்தல் முறைமை குறித்து பல பரிந்துரைகளை முன்வைத்துள்ளோம்.

காலவரையறையின்றி பிற்போடப்பட்டுள்ள மாகாண சபைத் தேர்தலை வெகுவிரைவில் நடத்த வேண்டும் என்ற நிலைப்பாட்டில் உறுதியாக உள்ளோம். எதிர்வரும் காலங்களில் அரசியல் கட்சிகளுடன் மாகாண சபைத் தேர்தல் குறித்து பேச்சில் ஈடுபடவுள்ளோம். மாகாண சபைத் தேர்தல குறித்து சகல அரசியல் கட்சிகளும் ஒன்றிணைந்து செயற்பட வேண்டும்.

காணப்படும் சட்ட சிக்கலுக்குத் தீர்வு கண்டு மாகாண சபைத் தேர்தலை விரைவாக நடத்தும் சூழலை ஏற்படுத்திக் கொடுக்க வேண்டிய பொறுப்பு அரசுக்கும், நாடாளுமன்றத்துக்கும் உண்டு." - என்றார்.

---

## சட்டமா அதிபருக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

அழுத்தம் பிரயோகிப்பது தெளிவாக விளங்குகின்றது. எதிர்வரும் காலங்களில் பலர் கைதாகலாம்."

- இவ்வாறு பிவிதுரு ஹெல உறுமய கட்சியின் தலைவரும் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினருமான உதய கம்மன்பில தெரிவித்தார்.

கொழும்பில் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்கையில் அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

"ஜனாதிபதி மற்றும் அரசின் மீதான மக்கள் நம்பிக்கை வெகுவாகச் சிதைவடைந்துள்ளது. அரசின் மீது மக்களின் வெறுப்பு தீவிரமடையும் போது மக்களின் கவனத்தைத் திசைதிருப்புவதற்காகக் கடந்த அரசுடன் தொடர்புடைய விடயங்களை அரசு வெளியிடும்.

ஜனாதிபதி நிதியத்தில் இருந்து நிதி பெற்றவர்கள், மதுபானசாலை அனுமதிப் பத்திரம் பெற்றவர்கள் விவரத்தை அரசு வெளியிட்டது. தற்போது 2022 மே கலவரத்தின் போது வீடுகளை இழந்த அரசியல்வாதிகள் பெற்றுக்கொண்ட இழப்பீட்டுத் தொகை தொடர்பான விபரங்களை அரசு வெளியிட்டுள்ளது.

ஜனாதிபதி நிதியத்தில் இருந்து நிதி பெற்றவர்களின் பெயர் விவரங்களை வெளியிட்ட அரசு அந்த நிதியை மீளப் பெற்றுக்கொள்வதற்கு எவ்வித நடவடிக்கைகளையும் எடுக்கவில்லை. அதேபோல் கடந்த அரசில் மதுபானசாலை அனுமதிப் பத்திரங்கள் பெற்றுக்கொண்டவர்களின் பெயர் விவரங்கள் வெளியிடப்பட்டன.

மதுபானசாலை அனுமதிப் பத்திரங்களை இரத்துச் செய்வதற்கு ஏதேனும் நடவடிக்கை எடுக்கப்படுமா எனக் கேள்வி எழுப்பிய போது அந்த மதுபானசாலை பத்திரங்கள் சட்ட ரீதியாக

07



# இந்திய மீன்பிடிப் படகுகள் ஏலத்தில்!

இலங்கைக் கடற்பரப்புக்குள் எல்லை தாண்டி மீன்பிடியில் ஈடுபட்ட நிலையில் பறிமுதல் செய்யப்பட்ட இந்திய மீன்பிடிப் படகுகள் மற்றும் மீன்பிடி உபகரணங்கள் என்பன பருத்தித்துறை நீதிமன்ற வளாகத்தில் நேற்று சனிக்கிழமை காலை பகிரங்க ஏலம் மூலம் விற்பனை செய்யப்பட்டன.

வல்வெட்டித்துறை கடற்பரப்பில் வைத்து கடந்த 2022 ஆம் ஆண்டு டிசம்பர் 29 ஆம் திகதி 4 இந்திய மீனவர்கள் இலங்கைக் கடற்படையினரால் கைது செய்யப்பட்டு வல்வெட்டித்துறைப் பொலிஸாரால் பருத்தித்துறை நீதிவான் நீதிமன்றில் முற்படுத்தப்பட்டு வழக்கு விசாரணை இடம்பெற்று வந்த நிலையில் மீனவர்கள் விடுவிக்கப்பட்டிருந்ததுடன் மீன்பிடிப் படகுகள் மற்றும் மீன்பிடி உபகரணங்கள் அரசுடமையாக்கப்பட்டிருந்தன.

இவ்வாறு அரசுடமையாக்கப்பட்ட இரண்டு லம்பாடி ரக மீன்பிடிப் படகுகள் 2 இலட்சத்து 12 ஆயிரம் ரூபாவுக்கும், மீன்பிடி வலைகள் ஒரு இலட்சத்து 81 ஆயிரம் ரூபாவுக்கும், இரண்டு வெளியிணைப்பு இயந்திரங்கள் 64 ஆயிரம் ரூபாவுக்கும், குளிரூட்டல் பெட்டி 55 ஆயிரம் ரூபாவுக்கும், இரண்டு ஜி.பி.எஸ். கருவிகள் 46 ஆயிரத்து 100 ரூபாவுக்கும், நங்கூரம் 8 ஆயிரம் ரூபாவுக்கும் என 5 இலட்சத்து 66 ஆயிரத்து 100 ரூபாவுக்கு ஏலம் மூலம் விற்பனை செய்யப்பட்டுள்ளன.





# பாடசாலை அதிபரைக் கடத்திச் சென்று தாக்கி காயப்படுத்திய ஆசிரியர் உட்பட இருவர் கைது!

கம்பஹா, பியகம பொலிஸ் பிரிவுக்குட்பட்ட சியம்பலாபே பிரதேசத்தில் உள்ள விகாரை ஒன்றுக்கு அருகில் பாடசாலை அதிபர் ஒருவரை ஜீப் வாகனத்தில் கடத்திச் சென்று வீடொன்றில் அடைத்து வைத்து, தாக்கிக் காயப்படுத்தினர் எனக் கூறப்படும் ஆசிரியர் உட்பட இருவர் கைது செய்யப்பட்டுள்ளனர் என்று பியகம பொலிஸார் தெரிவித்தனர்.

பியகம பொலிஸாருக்குக் கிடைத்த முறைப்பாட்டின் அடிப்படையில் மேற்கொள்ளப்பட்ட விசாரணையில் சந்தேகநபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

37 வயதுடைய ஆசிரியரும் 32 வயதுடைய பெண்ணுமே கைது செய்யப்பட்டுள்ளனர்.

பாடசாலை அதிபரும் கைது செய்யப்பட்ட ஆசிரியரும் ஒரே பாடசாலையில் கடமையாற்றுகின்றனர் எனவும், முன் விரோதம் காரணமாக இந்தத் தாக்குதல் இடம்பெற்றுள்ளது எனவும் பொலிஸார் தெரிவித்தனர்.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை பியகம பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

## சட்டமா அதிபருக்கு...

(6ஆம் பக்கத் தொடர்ச்சி...)

வழங்கப்பட்டுள்ளன. ஆகவே, அதற்கு எதிராக நடவடிக்கை எடுத்தால் சட்டச் சிக்கல் ஏற்படும் எனச் சபை முதல்வர் பிமல் ரத்நாயக்க குறிப்பிடுகின்றார்.

ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க தேர்தல் பிரசார மேடைகளில் மதுபானசாலை அனுமதிப் பத்திரங்களையும், முன்னாள் ஜனாதிபதிகளுக்கான கொடுப்பனவை இரத்துச் செய்வதாகவும் குறிப்பிட்ட விடயங்கள் அனைத்தும் இன்று பொய்யாக்கப்பட்டுள்ளது. மக்களைத் தூண்டிவிடுவதற்காகக் குறிப்பிட்ட விடயங்களைச் சட்டத்துக்கு முரணாகச் செயற்படுத்த முடியாது என்பதை அரசு தற்போது விளங்கிக்கொண்டுள்ளது.

அரசியல் பழிவாங்கலுக்காக அரசு நீதிக்கட்டமைப்பைப் பயன்படுத்திக் கொள்கின்றது. அரசியல் பழிவாங்கலை முன்னிலைப்படுத்தி வழக்குத் தாக்கல் செய்யப்படுகின்றன. சட்டமா அதிபருக்கு அரசு அழுத்தம் பிரயோகிப்பது தெளிவாக விளங்குகிறது. எதிர்வரும் காலப்பகுதியில் பலர் கைதாகலாம்." – என்றார்.

# இந்திய மீனவர்கள் 14 பேர் இன்று காலையில் கைது!

(ந.லோகதயாளன்)

இலங்கையின் நெடுந்தீவு கடற் பரப்பிற்குள் எல்லை தாண்டிய 14 இந்திய மீனவர்கள் இன்று அதிகாலை கடற்படையினரால் கைது செய்யப்பட்டனர்.

14 இந்திய மீனவர்களும் இரு ட்ரோளர் படகுகளில் இழுவை மடியில் ஈடுபட்ட சமயம் கைது செய்யப்பட்டமையோடு படகும் கைப்பற்றப்பட்டுள்ளது.

கைது செய்யப்பட்ட மீனவர்கள் மன்னார் கடற்படை தளத்திற்கு அழைத்து வரப்பட்டனர்.

# நமது கருத்து

உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்

259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com


## அரசின் 'அந்தர் பல்டி'!

கொடுத்த வாக்குறுதிகளை குறுகிய காலத்தில் மீறும் அரசு என்ற கின்னஸ் சாதனையை தற்போதைய தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் விரைவில் ஈட்டிவிடும் என்றே தோன்றுகின்றது.

முன்னைய அரசுகளைப் பிய்த்து உதறி, வாங்கு வாங்கு என்று வாய்க்கு வந்தபடி திட்டி, அதன் மூலம் ஆட்சி அதிகாரத்துக்கு வந்தது தேசிய மக்கள் சக்தி. அது எல்லோருக்கும் தெரிந்த உண்மை.

அப்படி முன்னைய அரசுகளின் தவறான கொள்கைப் போக்கு என்று தேசிய மக்கள் சக்தி எதிரணியில் இருந்த போது திட்டிய விடயங்களில் ஒன்று - வெளிநாட்டு ராஜதந்திர நியமனங்களில் - குறிப்பாக வெளிநாட்டுத் தூதுவர் நியமனங்களில் - தொழில் ரீதியான ராஜதந்திரிகளை நியமிக்காமல், அரசியல் ரீதியான நியமனங்களை முன்னர் ஆட்சியில் இருந்தவர்கள் மேற்கொண்டு வந்தார்கள் என்பது.

தாங்கள் ஆட்சிக்கு வந்தால் அத்தகைய நியமனங்களை வழங்காமல், தொழில் ரீதியான ராஜதந்திரிகளுக்கு - அதுவும் அத்துறையில் தகுதியும், திறமையும், நிபுணத்துவம் மிக்க அதிகாரிகளுக்க. - வெளிநாட்டு ராஜதந்திரிகள் மற்றும் தூதுவர் பதவிகள் வழங்கப்படும் என்று தேசிய மக்கள் சக்தி அறிவித்து வந்தது.

ஆனால் ஆட்சிக்கு வந்து மூன்று மாதங்களுக்குள் 'ஊருக்கடி உபதேசம் உனக்கு இல்லையடி!' - என்ற மாதிரி அந்த விடயத்திலிருந்து முழுமையாக நழுவத் தொடங்கி விட்டது அநுர குமார திஸநாயக்கவின் தேசிய மக்கள் சக்தி அரசாங்கம்.

புதிதாக நியமிக்கப்பட இருக்கும் வெளிநாட்டு தூதுவர்களின் பெயர்களைக் குறிப்பிட்டு கடந்த 30 ஆம் திகதி சம்பந்தப்பட்ட நாடுகளின் அனுமதிக்காக புதிய அரசு அனுப்பி வைத்திருக்கிறது. அதில் ஒரே ஒரு தொழில் ரீதியான ராஜதந்திரி தவிர, மிகுதி அனைவரும் அரசியல் ரீதியான பின்புலத்தில் தூதுவர் பதவிகளைப் பெறுகிறார்கள் என்ற விடயம் இப்போது அம்பலத்துக்கு வந்திருக்கிறது.

இந்தியாவுக்கான தூதுவராக நியமிக்கப்படும் மகிஷினி கொலன்ன மட்டுமே தொழில் ரீதியான ராஜதந்திரியாவார்.

முன்னாள் விமானப்படை தளபதி எயார் மார்ஷல் உதனி ராஜபக்ஷ தென்னாபிரிக்கத் தூதுவராக நியமனம் பெறுகிறார்.

முன்னாள் பிரதம நீதியரசர் ஜயந்த ஜயசூரிய நியூயோக்கில் ஐ.நாவுக்கான இலங்கையின் நிரந்தர வதிவிடப் பிரதிநிதியாக நிய்ச்மிக்கப்படுகின்றார்.

ஸ்ரீலங்கா நிர்வாக சேவையைச் சேர்ந்த நிமல் சேனாதிர தற்போது ஸ்கொட்லாந்தில் கலாநிதி பட்ட படிப்பில் ஈடுபட்டிருக்கிறார். அவர் பிரிட்டனுக்கான தூதுவர் பதவியைப் பெறுகிறார்.

பேராசிரியர் ஜனக குமாரசிங்க ஜப்பான் தூதுவராகவும், பேராசிரியர் அருஷ கூரே ஐக்கிய அரபு எமிரேட்ஸின் தூதுவராகவும், பேராசிரியர் நிர்மல் ரத்நாயக்க மற்றொரு தூதுவர் பதவியையும் பெறுகிறார்கள்.

அண்மையில் ஓய்வு பெற்ற கடற்படை தளபதி பாகிஸ்தானுக்கு தூதுவராகவும், 'ராவய' பத்திரிகையில் எழுதி வந்த ஊடகவியலாளர் ரத்னாயக்கா முதியான் சலாகே மஹிந்த ரத்னாயக்கா கியூபா தூதுவராகவும் நியமனம் பெறுகின்றனர்.


இதுவரை காலமும் தூதுவர் பதவிகளில் இடம்பெற்ற அரசியல் நியமனங்களை ரத்துச் செய்து, அந்த இடத்துக்கு தொழில் ரீதியான ராஜதந்திரிகளை திறமை, சேவை, மூப்பு, தகுதி ஆகியவற்றின் அடிப்படையில் நியமிக்க விரைந்து நடவடிக்கை எடுக்கப்படும் என்று தேர்தலுக்கு முன்னரும் தேர்தலின் பின்னர் அதிகாரப் பொறுப்பை ஏற்றகையோடும் தேசிய மக்கள் சக்தியினர் அறிவித்து வந்தனர்.

அதன்படி, அவ்வாறு அரசியலில் ரீதியாக நியமனம் பெற்று தூதுவர்கள் புதிய அரசு பதவியேற்றதும் நாட்டுக்குத் திரும்ப அழைக்கப்பட்டார்கள்.

இப்போது அந்த இடத்துக்கு மீண்டும் அரசியல் நியமனங்கள் புதிய அரசினால் வழங்கப்படுகின்றன.

இந்த நடவடிக்கையை ஆட்சேபித்துள்ள இலங்கை வெளிநாட்டுச் சேவை சங்கம், இது தொடர்பில் தங்களின் அதிருப்தியையும் ஆட்சேபனையையும் தெரிவிப்பதற்கு ஜனாதிபதியையும் வெளிவிவகார அமைச்சரையும் சந்திப்பதற்கு முயற்சி எடுத்தும், அது வாய்க்கவில்லை என்று அந்தச் சங்கத்தின் வட்டாரங்கள் தெரிவித்தன.

தேசிய மக்கள் சக்தி அரசின் வாய்ச்சவடால் பேச்சின் பம்மாத்துப் போக்கு இப்போது அம்பலமாகி வருகின்றது. கொள்கை ரீதியான அதன் குத்துக்கரணங்கள் - அந்தர் பல்டிகள் - அவதானிகளை ஆச்சரியத்தில் ஆழ்த்தி வருகின்றன.





# மாவை - போராளியாக எழுந்து அரசியல்வாதியாக வீழ்ந்தவர்!



புருஜோத்தமன் தங்கமயில்

இலங்கைத் தமிழரசுக் கட்சியின் மூத்த தலைவர் மாவை சேனாதிராஜாவின் அந்திம கால அரசியல் போன்று அவரின் மறைவுக்குப் பின்னரான நாடள்களும் மலினமான அரசியல்வாதிகளினால் கையாளப்பட்டு இறுதிப் பயணம் பெருந்துயராக முடிந்திருக்கின்றது.

கடந்த ஆண்டு மறைந்த தமிழரசுக் கட்சியின் பெருந்தலைவரான இரா.சம்பந்தனை விட அதிக காலம் நேரடி அரசியல் போராட்டக் களத்தில் பயணித்தவர் மாவை சேனாதிராஜா. அறுபது ஆண்டுகளுக்கும் மேலான அவரின் தமிழ்த் தேசியப் பயணத்தில் முதல் முப்பது ஆண்டுகள் உணர்வு மிக்க போராளியாகவும், இறுதி முப்பது ஆண்டுகள் பதவி, பகட்டுக்காக அலைந்து அதனாலேயே தன்னுடைய போராளி அடையாளத்தை இழந்த அரசியல்வாதியாகவும் அவர் நினைவுகூரப்படுவார்.

தமிழரசுக் கட்சியின் வரலாற்றில் அதிக காலம் தலைவராகவும், செயலாளராகவும் செயற்பட்டவர் மாவை மாத்திரமே. தமிழரசின் நிறுவனரான தந்தை செல்வா கூட, மாவை அளவுக்கு அதிக காலம் எந்தப் பதவியையும் கட்சிக்குள்ளும் நாடாளுமன்றத்துக்குள்ளும் வகித்தவர் அல்லர். தமிழர் விடுதலைக் கூட்டணி (மே, 1972இல்) தோற்றுவிக்கப்பட்டது முதல் தமிழரசுக் கட்சி உறங்கு நிலைக்குச் சென்றது. அது உறங்கு நிலையில் இருந்த காலத்திலும் அதன் செயலாளர் உள்ளிட்ட நிர்வாகப் பதவிகளில் மாவை இருந்திருக்கிறார். 2004 பொதுத் தேர்தல் காலத்தில் தமிழீழ விடுதலைப் புலிகளினால், தமிழரசுக் கட்சியும் அதன் வீட்டுச் சின்னமும் மீண்டும் செயற்பாட்டுத் தளத்துக்கு கொண்டு வரப்பட்டது. தங்களின் சொல் பேச்சினைக் கேட்கும் ஒருவராக மாவை இருப்பார் என்கிற நம்பிக்கையினாலும், தந்தை செல்வாவினால் தோற்றுவிக்கப்பட்ட கட்சி என்ற அடிப்படையிலும் தமிழரசையும், வீட்டுச் சின்னத்தையும் தேசியத் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரன், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தேர்தலுக்கான கட்சியாக தேர்வு செய்தார். இல்லையென்றால், 2004 பொதுத் தேர்தலில் கூட்டமைப்பின் தேர்தல் கால கட்சியாக அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸோ அல்லது முன்னாள் ஆயுதப் போராட்ட இயக்கமொன்றின் சின்னமோ அறிவிக்கப்பட்டிருக்கும். ஆனால், தமிழரசுக் கட்சியின் மீது எந்த வித அரசியல் கறுப்பு வரலாறுகளும், படுகொலை அடையாளங்களும் இல்லை என்கிற காரணமும், "...மாவை அண்ணன் எங்களின் ஆள், அவர் நாங்கள் சொன்னால் கேட்பார்..." என்கிற எண்ணமும்தான் கிளிநொச்சியில் இருந்து, கூட்டமைப்பின் தேர்தல் சின்னமாக வீட்டுச் சின்னம் அறிவிக்கப்பட காரணமானது.

மீள உயிர்ப்பிக்கப்பட்ட தமிழரசின் தலைவராக சம்பந்தன் இருந்தாலும், அவர் மீது புலிகளுக்கு பெரிய நம்பிக்கைகள் இருக்கவில்லை. ஆனால், கூட்டணியின் செயலாளர் நாயகமான வீ.ஆனந்தசங்கரி போன்று, புலிகளை தமிழ் மக்களின் ஏக பிரதிநிதிகளாக ஏற்கமாட்டேன் என்று சம்பந்தன் அறிவிக்காததனால், அவர் தமிழரசின் தலைவரானார். அதுபோல, கூட்டமைப்பின் நாடாளுமன்றக் குழுத் தலைவராகவும் புலிகளினால் ஏற்றுக்கொள்ளப்பட்டார். ஆனால், தமிழரசுக் கட்சியின் மீள் வருகைக்கான காரணங்களில் மாவையின் புலிகளின் தலைமைக்கான விசுவாசம் முக்கிய காரணமாகும். அதனை தவிர்த்துவிட்டு, கூட்டமைப்பின் அரசியலையோ, இன்றைய தமிழரசுக் கட்சியின் நிலைபெறுகையையோ பேச முடியாது. எந்த வரலாறும் காய்தல் உவர்த்தல் இன்றி பதிவு செய்யப்பட வேண்டும். அதுதான், எதிர்கால வெற்றிகளுக்கான படிப்பினைகளை வழங்கும். அந்த நிலைப்பாட்டில் இந்தப் பத்தியாளர் உறுதியாக இருக்கின்றார். அதனால்தான், மாவை தொடர்பிலான இந்தப் பத்தியிலும், தமிழ்ப் பொதுப்புத்தியில் உள்ள ஒருவரின் மறைவுக்குப் பின்னரான நாள்களில் அவர் தொடர்பிலான விமர்சனங்களை தவிர்த்துவிட்டு, புகழுரைகளை மாத்திரம் பேச வேண்டும் என்கிற நிலைப்பாட்டினை நிராகரித்து நின்று இந்தப் பத்தி எழுதப்படுகின்றது.

தந்தை செல்வாவின் தமிழ்த் தேசியப் போராட்டத்

தொடர்ச்சி▼



# மாவை - போராளியாக எழுந்து அரசியல்வாதியாக வீழ்ந்தவர்!

தொடர்ச்சி▲

துக்கான அர்ப்பணிப்பைக் கண்டு, தமிழரசுக் கட்சியில் ஓர் ஆக்ரோசமான இளைஞனாக இணைந்த மாவை, தமிழரசுக் கட்சியின் முக்கியஸ்தர்களில் அதிக காலம் சிறையில் இருந்தவர். ஏழு ஆண்டுகள் வரையில், பல சிறைகளிலும் அரசியல் கைதியாக வழக்கு விசாரணைகளின்றி கழித்திருக்கிறார். அதுபோல, இலங்கை பாதுகாப்பு படையினரின் தாக்குதலுக்கு உள்ளாகி, உடல் முழுவதும் மாறா வடுக்களைப் பெற்ற போராளி. 2001 பொதுத் தேர்தல் பரப்புரைக்காக தீவகத்தை நோக்கிச் சென்ற கூட்டமைப்பின் குழுவினர் மீது ஊர்காவல்துறை நாரந்தனை பகுதியில் வைத்து, ஈ.பி.டி.பியின் ஆயுதக் கும்பல் தாக்குதல்களை நடத்தியது. இதில், கூட்டமைப்பின் ஆதரவாளர்கள் இருவர் படுகொலை செய்யப்பட்டார்கள். இதன்போது, மாவை சேனாதிராஜா தலையில் காயத்துக்கு உள்ளானார். என்.கே.சிவாஜிலிங்கம் உள்ளிட்ட இன்னும் 17 பேர் படுமோசமான காயங்களுக்கு உள்ளானார்கள். இப்படியாக அவர் அரச படைகளினதும், அவர்களின் துணைக்குழுக்களாக இயங்கிய ஈ.பி.டி.பி. உள்ளிட்டவற்றின் தாக்குதல்களுக்கும் உள்ளாகியிருக்கியிருக்கிறார்.

ஆனால், முள்ளிவாய்க்கால் முடிவுகளுக்குப் பின்னரான தமிழ்த் தேசிய அரசியல் வரலாற்றில் மாவை, ஒரு பதவிக்காக ஆலாய் பறந்த அரசியல்வாதியாக மாறிப்போனார். அதற்காக அவர் தன்னுடைய போராளி நிலையில் இருந்து யாரும் எதிர்பார்க்காத அளவுக்கு கீழிறங்கினார். கட்சியின் சிதைவுகளுக்கும் ஒரு காரணமாகிப் போனார்.

தமிழரசுக் கட்சி இன்றைக்கு இரண்டாக பிளவுபட்டிருக்கின்றது. செங்குத்துப் பிளவைச் சந்திக்கவில்லை என்றாலும், யாழ்ப்பாண தேர்தல் மாவட்டத்தில் பின்னடைவை ஏற்படுத்தும் அளவுக்கு தமிழரசுக் கட்சியின் பிளவு வளர்ந்துவிட்டது. அந்தப் பிளவை, இப்போதைக்கு சரி செய்யவும் வாய்ப்பில்லை. அந்தப் பிளவை, அதிகரிக்கும் செயற்பாடுகளை மாவையின் இறுதி நிகழ்வுகளை ஒருங்கிணைத்தவர்களும், அவர்களின் தொண்டர்பொடிகளும் கூடச் செய்துவிட்டனர்.

மாவை, கட்சிக்கும் அவர் ஏற்ற தலைமைக்கும் கேள்விகளுக்கு அப்பாலான விசுவாசத்தினை கடந்த காலங்களில் வெளிப்படுத்தி வந்திருக்கிறார். 'தம்பி சேனாதி...' என்ற சம்பந்தனின் அழைப்பில் மாவை



முழுவதுமாக இணங்கிப் போய்விடுவார். வடக்கு முதலமைச்சர் பதவி மீது தீராக் காதல் கொண்டிருந்தாலும், சம்பந்தனின் விருப்பம் சி.வி.விக்னேஸ்வரன் நோக்கியது என்ற காரணத்துக்காக மாவை, அந்தப் பதவியை விட்டுக் கொடுக்கும் நிலைக்கு தள்ளப்பட்டார். அதில் அவருக்கு வருத்தம் இருந்தாலும் '...சாம் அண்ணன் கேட்கும் போது, எப்படி மறுப்புச் சொல்ல முடியும்..' என்ற மாவையின் கட்சித் தலைமைக்கான இறுதி அர்ப்பணிப்புப் பற்றி எல்லோரும் சிலாகிப்பது உண்டு. சம்பந்தன் வாழும் காலம் வரையில், மாவை அவரின் சொற்களை பெரிதாக மீறியதில்லை என்பது உண்மை. ஆனால், அதுதான் அரசியல்வாதியாக அவரின் தோல்விகளுக்கும் காரணமானது. மாவை எப்போதுமே, யாரோ ஒருவர் வழிநடத்த அந்தத் தடங்களை கேள்விகள் இன்றிப் பின்தொடரும் ஒருவராகவே இருந்திருக்கிறார். அவர் ஒரு தலைமைத்துவ பாத்திரம் இல்லை. தமிழரசுக் கட்சியின் செயலாளர் என்பது, நிர்வாக ரீதியில் தலைவருக்கு அடுத்த நிலையில் இருக்கும் பதவிதான். ஆனால், அதன் செயற்பாட்டுத் தன்மை என்பது தலைவருக்கான அதிகாரங்களை பல இடங்களில் தாண்டியது. அப்படித்தான் அந்தக் கட்சியின் யாப்பு வரையறுத்திருக்கின்றது. ஆனால், அந்த அதிகாரங்களை மாவை செயலாளராக செயற்பட்ட காலத்தில் ஒரு போதும் பயன்படுத்தியிருக்கவில்லை. சம்பந்தன் என்ன

தொடர்ச்சி▼




# மாவை - போராளியாக எழுந்து அரசியல்வாதியாக வீழ்ந்தவர்!

தொடர்ச்சி▲

சொல்கிறாரோ, அதனையெல்லாம் ஒரு உதவியாளர் போல நின்று செய்திருக்கின்றார். ஆனால், கட்சியின் செயலாளர் பதவிக்கான அதிகாரம் எப்படிப்பட்டது என்பதை, 2020 பொதுத் தேர்தலில் மாவை தோல்வியடைந்ததும் உணர்ந்து கொண்டார். கட்சியின் தலைவராக மாவை இருந்த போதிலும், கட்சியின் தேசியப் பட்டியல் உறுப்பினர் பதவிக்கு அவரின் விருப்பினை மீறி, கட்சியின் முடிவெடுக்கும் தலைமையாக அப்போது இயங்கிய சம்பந்தன் - எம்.ஏ.சுமந்திரன் இணை, கலையரசனை நியமித்தது. அந்த நியமனத்தினை அன்றைய செயலாளர் சி.துரைராஜசிங்கம் தேர்தல் திணைக்களத்துக்கு அறிவித்தார். அந்த அறிவிப்பு, கட்சியின் தலைவரை மீறி செய்யப்பட்டது என்ற விடயம் அப்போது மேலழுந்தது. ஆனால், அந்தத் தீர்மானத்தினை சட்டரீதியாகவோ, நிர்வாக ரீதியாகவோ சவாலுக்கு உள்ளாக்கும் அதிகாரம், தலைவராக மாவைக்கு இருக்கவில்லை. அப்போதுதான், அவர் கட்சியின் யாப்பு யாருக்கு என்ன அதிகாரங்களை வழங்கியிருக்கின்றது என்பதை உணரத் தொடங்கினார். ஆனால், அப்போது காலம் அவரிடத்தில் இருந்து அரசியலை கிட்டத்தட்ட முழுவதுமாக பிடுங்கி விட்டிருந்தது.

'தந்தை செல்வா, அண்ணன் அமிர், சாம் அண்ணா.... தம்பி சுமந்திரன்' என்று அவரை யாராவது ஒருவர் கையைப் பிடித்து வழிநடத்துவதற்கு தேவையாக இருந்தது. முடிவெடுக்கும் அதிகாரமுள்ள தலைமையாக அவர் ஒருபோதும் செயற்பட்ட அனுபவம் இல்லாததால், அவரின் இறுதிக் காலத்தில் யார் யாரோவெல்லாம் அவரை கையாளத் தொடங்கிவிட்டார்கள். அதனால்தான், அவரின் இறுதிக்கால அரசியல் வாழ்வு பெரும் இழுபறிகள் நிறைந்ததாக மாறியது. இந்தப் பத்தியாளர் 2015க்குப் பின்னரான காலத்தில் மாவையை காட்டமாக விமர்சித்திருக்கிறார். அதிலும், 2020 தேர்தல் காலம் தொடங்கி, அவர் மறையும் வரையிலான காலத்தில் அவரின் அரசியல் நடவடிக்கைகள் என்பது, தமிழரசுக் கட்சியை மாத்திரமல்ல, தமிழ்த் தேசிய அரசியலையும் பின்நோக்கி இழுத்துவிடும் வேலைகளினால் நிரம்பியது. கடந்த ஜனாதிபதித் தேர்தல் காலத்திலும், பொதுத் தேர்தல் காலத்திலும் அவரின் அரசியல் நடவடிக்கைகள் யாரும் ஏற்றுக்கொள்ள முடியாத அபத்தங்களினால் நிரம்பியிருந்தது. இவ்வாறான நிலை, அவரின் மீதான மதிப்பை முழுவதுமாக கீழிறக்கியது. ஜனாதிபதித் தேர்தல் காலத்தில் அவரின் நிலைப்பாடுகளை மீறி கட்சி ஒரு தீர்மானத்தை எடுத்தது. அந்தத் தீர்மானம் அவருக்கு உவப்பானது இல்லை என்றாலும், கட்சியின் முடிவுக்கு அவர் கட்டுப்பட்டிருக்க வேண்டும். ஆனால், அவர் கட்சியின் தீர்மானத்தை ஊடக மாநாடு நடத்தி அறி



வித்துவிட்டு, சில மணிநேரங்களிலேயே, இன்னொரு தரப்பினரின் மேடையில் ஏறி, கட்சியின் முடிவை நிராகரிக்கும் முகமாக பேசியமை எல்லாமும் கட்சி மீதான மதிப்பை பலமாக இறக்கம் செய்தது.

அத்தோடு, பொதுத் தேர்தல் காலத்தில், கட்சியின் தலைமைப் பதவியை துறந்தமை கட்சி மீதான மக்கள் அபிமானத்தை கனதியாக குறைக்க காரணமானது.

தொடர்ச்சி▼




# மாவை - போராளியாக எழுந்து அரசியல்வாதியாக வீழ்ந்தவர்!

**தொடர்ச்சி▲**

இந்த இரு முடிவுக்குப் பின்னால், வேறு நபர்களும் தரப்புக்களும் இருந்தன என்பது தொடரும் வாதம். ஆனால், நீண்ட நெடிய காலம் தமிழ்த் தேசிய அரசியலில் நீடித்துவிட்ட ஒருவர், மற்றவர்கள் நீட்டும் இடங்களில் எல்லாம் கையெழுத்திடவோ, பேசவோ செய்கிறார் என்றால், அவரின் தனியாளுமைக்கு என்ன மதிப்பு? பொதுத் தேர்தல் காலத்தில் பதவியை இராஜினாமாச் செய்துவிட்டு, தேர்தல் முடிந்ததும் இராஜினாமாக் கடிததத்தை மீளப்பெற முயன்றமை



எல்லாமும் அவரின் மீதான மதிப்பை காவு வாங்கியது. இறுதியில், அவரின் இறந்த உடலை வைத்து, சில தரப்புக்கள் செத்தவீட்டு அரசியலை நடத்தியமையோடு, மாவை என்ற ஒரு மூத்த முன்னாள் போராளியின் வரலாறு முடிந்து போயிருக்கிறது.

தமிழரசுக் கட்சியின் நீண்டகாலத் தலைவரின் உடல், அந்தக் கட்சியின் கொடியினால் போர்த்தப்பட்டாலும் கட்சியின் அலுவலகத்துக்கு எடுத்துச் செல்ல, இறுதி நிகழ்வுகளை ஒருங்கிணைத்தவர்கள் முயலவில்லை. கட்சியின் பதில் தலைவர் உள்ளிட்ட பதினெட்டுப் பேர்தான், மாவையின் மரணத்துக்கு காரணம் என்ற பனர்கள் கட்டப்பட்டன. பேஸ்புக்கில் போலிக் கணக்குகளிலும் எழுதப்பட்டன. இறுதி அஞ்சலி செலுத்த வந்த நாடாளுமன்ற உறுப்பினர்கள் உள்ளிட்ட தமிழரசுக் கட்சிக்காரர்கள் பலர், இடம், பொருள் தெரியாத சில காவாலிகளினால் சாவு வீட்டில் இடைமறிக்கப்பட்டு அச்சுறுத்தப்பட்டார்கள். ஆனால், முரண் நகை என்னவென்றால், நாரந்தனையில் வைத்து மாவையின் தலையில் தாக்கிய ஈ.பி.டி.பி. அமைப்பின் தலைவரோ, அந்த இயக்கத்தினரோ இறுதி அஞ்சலி செலுத்த எந்தவித இடையூறும் இன்றி அனுமதிக்கப்பட்டார்கள்.

அதுபோல, மாவையின் கட்சிக்காரர், முன்னாள் சக நாடாளுமன்ற உறுப்பினர், இந்நாள் சம்பந்தியான மாமனிதர் ரவிராஜின் கொலையின் சூத்திரதாரிகள், ராஜபக்ஷக்கள். அவர்களின் ஆட்சியில் வேட்டையாடப்பட்டவர்களில் முக்கிய தமிழ்த் தேசிய ஆளுமை, ரவிராஜ். ஆனால், அவரின் குடும்பத்தினருக்கோ, மாவையின் இறுதி நிகழ்வை ஒருங்கிணைத்த சிவஞானம் சிறீதரனுக்கோ, நாமல் ராஜபக்ஷ இறுதி அஞ்சலி செலுத்த வருவது பிரச்சினையில்லை. நாமலுக்கு நோகாமல் சிரித்துப் பேசி, வழி அனுப்பி வைக்கும் அளவுக்கு அரசியல் நாகரிகம் தெரிந்திருக்கின்றது. ஆனால், சொந்தக் கட்சிக்காரர்களை, கொலைகாரர்களாக சித்திரித்து செய்யப்பட்ட இழிநிலை அரசியலைப் புறந்தள்ளி, அனைவரையும் ஒன்றிணைந்து, மூத்த தலைவரான மாவையின் இறுதி நிகழ்வினை நடத்தி முடிப்பதில்தான் அவர்களுக்கு சிக்கல் இருந்திருக்கின்றது.

மாவை என்ற அரசியல்வாதியின் பயணத்தினை காலத்துக்கு காலம் யாரோ ஒருவர் வழிநடத்தியிருக்கிறார். அப்படித்தான், அவரின் இறுதி நாள்களும் இறுதிப் பயணமும்கூட யார் யாரோ, தங்களின் தனிப்பட்ட விருப்பு வெறுப்புகளுக்காக இழுத்துப் பறித்து நடத்தி முடித்திருக்கிறார்கள். காலம் அவரைப் பலமாக அலைக்கழித்திருக்கின்றது. அந்த அலைக்கழிப்பில் இருந்து அவர் விடைபெற்றுச் சென்றுவிட்டார். இனியாவது அவரது ஆன்மா ஆழ்ந்து உறங்கட்டும். மூத்த முன்னாள் போராளிக்கு அஞ்சலிகள்.



# செத்த விட்டு அரசியல்



வி.எஸ்.சிவகரன்

'ஊரெல்லாம் கூடி ஒலிக்க அழுதிட்டுப் பேரினை நீக்கிப் பிணம் என்று பெயரிட்டு, சூரையங் காட்டிடை கொண்டு போய்ச் சுட்டுட்டு நீரினில் மூழ்கி நினைப் பொழிந்தர்களே' – என்கிறார் திருமூலர்.

எதையும் கேள் தருகிறேன் மரணத்தை மட்டும் கேளாதே என்கிறார் எமதர்மன்.

'வகுத்தான் வகுத்த வகையல்லால் கோடி தொகுத்தார்க்கும் துய்தல் அரிது' என்கிறார் வள்ளுவர்.

மரணமே உன் வாழ்வைப் பூரணப்படுத்துகிறது என்கிறார்கள் சித்தர்கள்.

எல்லா உயிர்களுக்கும் அது நிகழும். அதனை ஏற்றுக் கொள்கின்ற பக்குவத்திலிருந்து மனிதன் மாறுப்படுகிறான். ஆசாபாசங்கள் அவனை ஆட்கொண்டு பரிதவிக்க வைக்கின்றன. எல்லா மரணங்களுக்கும் காரணம் உண்டு. அப்படியாயின் இறவாத நிலை அல்லவா மனிதர்களுக்கு வேண்டும்? காரணம் இல்லாமல் மரணம் நிகழ முடியாது. இதற்கு 'நிர்விகல்ப சமாதி' மனோநிலை வேண்டும். அந்த மனோநிலையில் இன்று சங்கர மடத்திலும் யாரும் இல்லை. மக்கா மதினாவிலும் இல்லை. வத்திக்கான் சென் பீட்டர்ஸிலும் எவரும் இல்லை. புத்தகாயாவிலும் இல்லை.

நிர்விகல்ப சமாதி மனோநிலையின் உச்சம் இறைநிலை அடைதல். இறைநிலை என்பது கடவுளை அடைதல் அல்ல. கடவுளை நம்புகிறவர்கள் விதியை ஏற்றுத்தான் ஆகவேண்டும்.

தமிழர்களுடைய பண்பாட்டியலில் இறப்பு என்பதனை கனத்த இதயத்துடன் முற்பகையில் இருந்தவர்களோடு கூட அளவளாவி, அவரின் கடந்த கால செயலுக்காக வருந்தி அழுது, ஒழுங்கு முறையாக உடலுக்குக் கடமையை செய்து தகனத்திற்கு அனுப்பி வைப்பதே மரபாக இருக்கிறது. யுத்தகளத்தில் கூட சண்டையிட்ட எதிரிகள் ஒருவருக்கு ஒருவர் இறந்து விட்டால் அதைக் கூட இராணுவ மரியாதையோடு தான் அனுப்பி வைக்கின்ற மரபும் போரியல் விதியாக உள்ளது. இந்தப் பண்பாட்டை நாம் கடைப்பிடிக்க வேண்டியது காலத்தின் கட்டாயம்.

இறந்தவர்களுக்கு நாம் அளிக்கும் இறுதி மரியாதை அவர்களின் ஆன்மா ஈடேற நாம் அதைவிட வேறு என்ன செய்ய முடியும்?

மாவை சேனாதிராஜா மனிதர்களோடு பழகுவதற்கு மிகவும் இனிமையானவர். கடும் சொற்களின்றி மென்மையான வார்த்தைகளோடு, கடிந்து கொள்ளாத மனிதராக திகழ்ந்தவர். எல்லோரையும் நம்பியவர். எல்லோரோடும் உறவு பகிர்ந்தவர். பகைமைபாராமல் வாழ்ந்து பழகியவர். கடுமையாக விமர்சித்தவர்களை கூடக் கண்டு புன்னகைக்க கூடியவர். ஒரு பண்பட்ட அரசியல்வாதியாகவே திகழ்ந்தவர்.

இந்தச் செத்த வீட்டு அரசியலை செய்தாரை அவரின் ஆன்மா ஒருபோதும் மன்னிக்காது. ஏனெனில் இவ்விதமான மூன்றாம் தர செயல்பாட்டை அவர் ஒருபோதும் விரும்பியிருக்க மாட்டார்.

எப்பொழுதும் ஐக்கியத்தையும் சகோதரத்துவத்தையும் உறவாடலையுமே மகிழ்ந்து விரும்பியவர். தமிழரசுக் கட்சியின் தலைவர் சேனாதியில் பல்வேறு விதமான குறைபாடுகளும் குளறுபடிகளும் உண்டு. ஆனால் தனி மனித உறவில் உள்ள சேனாதியில் எந்தவிதமான காழ்ப்புணர்வும் கண்டு கொள்ள முடியாது. அவ்விதமான ஒருவரின் இறுதி யாத்திரையை ஒட்டி எள்ளி நகையாடும் அளவிற்கு செயற்பட்டுள்ளனர். அரை நூற்றாண்டுகளுக்கு மேலாக தான் விசுவாசித்த கட்சி அலுவலகத்துக்கு கூட உடலைக் கொண்டு போக முடியாத துர்ப்பாக்கிய நிலையை ஏற்படுத்தி விட்டனர். இவ்விதமான நிலைப்பாட்டை அவரது குடும்பத்தினரும் எப்படி ஏற்றார்களோ என்பது ஆழ்ந்த வேதனைக்குரியது. அவர்கள் உடனடியாகவே இதனைச் சரி செய்திருக்க வேண்டும்.

ஓர் அரசியல் கட்சியாக பல்வேறு விதமான வாதப் பிரதிவாதங்களுடன் தீர்மானங்கள் எடுக்கப்படும். அதில் பாதிப்புகள், பாராட்டுக்கள், அவமானங்கள், அவமதிப்புகள், புறக்கணிப்புகள் எழுவது சர்வ சாதாரணம். மாவை சேனாதிராஜாவால் பாதிக்கப்பட்டவர்களும் கூட நூற்றுக்கணக்கில் இருக்கிறார்கள்.

தன்னுடைய சகோதரியின் காணிப் பிணக்கில் எதிராக இருக்கிறார் என்பதற்காகவே மானிப்பாய் பிரதேச சபை உறுப்பினர் – இவருடைய நீண்ட கால நண்பர் – கௌரிகாந்தனை முறையின்றிக் கட்சியிலிருந்து நீக்கியவர். சி.வி.கே.சிவஞானம், சுமந்திரன் போன்றோர்களது ஆலோசனையில் எத்தனை பேரை இவர் கட்சியில் இருந்து நீக்கினார்! இறுதியில் அவர்களே இவருக்கு எதிராக மாறினார்கள் என்கின்ற நிலையும் எழுந்து விட்டது.

ஓர் எதிரி, துரோகிக்குக் கூட வரக்கூடாத அந்திம காலத்து நிலையும் மரணத்துக்குப் பிந்திய இறப்பு வீட்டு நிகழ்வும் மாவைக்கு நிகழ்ந்து விட்டது என்பதுதான.

தொடர்ச்சி▼



# செத்த விட்டு அரசியல்

தொடர்ச்சி▲

நிலைமை. அவரின் விடுதலை நோக்கிய அற உணர்வு அரசியலுக்கு குடும்பத்தினரும் சில பிரமுகர்களும் சேர்ந்து இழுக்கு ஏற்படுத்தி விட்டனர் என்கின்ற குற்றச்சாட்டு இல்லாமல் இல்லை.

வைத்திய சாலையில் இருந்த போது பார்வையிடச் சென்ற கட்சியினுடைய மூத்த செயற்பாட்டாளர் திரு. குலநாயகத்தை அவருடைய சகோதரி தகாத வார்த்தைகளால் திட்டி அனுப்பியமை வேதனைக்குரியதே. மாவை சேனாதிராஜா மாவிட்டபுரத்தில் அவருடைய வீட்டில் இருந்த காலத்தை விட குலநாயகத்தின் வீட்டில் இருந்த காலம்தான் அதிகம். 2001 ஆம் ஆண்டு ஈ.பி.டி.பியினரின் தாக்குதலில் கடும் காயம் அடைந்து வந்திருந்த போது குலநாயகத்தின் பிள்ளைகளே உணவூட்டி பராமரித்தனர். அப்போது எல்லாம் இந்த சகோதரி வந்து பார்வையிட்டு செல்வார். புணிவிடை செய்தது இவர்கள்.

குலநாயகத்துக்கும் மாவை சேனாதிராஜாவுக்குமான உறவு 50 ஆண்டுகள் கடந்தது. அவ்வாறான ஒருவரை இவ்விதமாக தரங்குறைந்த வார்த்தைகளால் பேசுவது என்பது மனித நாகரிகத்துக்கு அப்பாற்பட்டது. அது மாத்திரமல்ல, இவரோடு மிகவும் நெருக்கமானவர் திரு.கமலேஸ்வரன். அவருக்கும் கூட இறப்பு வீட்டில் வைத்து பிரச்சினை ஏற்படுத்தி இருக்கிறார்கள். இவர் மாவை சேனாதிராஜாவுக்கு தனிப்பட்ட முறையில் கூட பல்வேறு விதமான உதவிகளை எல்லாம் புரிந்து வந்தவர். அரசியல் பிரச்சினையை இறப்பு வீட்டில் வெளிப்படுத்துவது என்பது மனித நாகரிகம் அல்ல.

இவருடைய சகோதரன் 1977ஆம் ஆண்டு மாவை சேனாதிராஜாவுக்கு தேர்தலில் போட்டியிட இடம் வழங்கப்படவில்லை என செனட்டர் நடராஜா (பொட்டர்) வீட்டை இரவோடு இரவாக துவம்சம் செய்தவர். மேலும் பல ஆதாரங்கள் உண்டு. ஆனால் இறப்பிற்கு பின்னர் அவற்றை தொடர்ந்து விமர்சனம் செய்வது மரபல்ல.

ஆயுதக் குழுக்கள் தோன்றிய பின்னர் 'துரோகி'ப் பட்டம் வழங்குவதும் 'தியாகி'ப் பட்டம் வழங்குவதும் சர்வ சாதாரணமானதே. யுத்தத்துக்கு பின்னர் கஜேந்திரகுமார் பொன்னம்பலத்தின் தமிழ் தேசிய மக்கள் முன்னணி தம் கட்சியைத் துரோகிப் பட்டம் வழங்கும் பல்கலைக்கழகமாகவே வைத்திருக்கின்றார்.

1980களின் பிற்பகுதியில் அமிர்தலிங்கத்திற்கு 'துரோகி' பட்டம் வழங்கி கொடும்பாவி எரிப்பு இடம் பெற்றது. அந்தக் கொடும்பாவி எரிப்பிலே கொள்ளிக் குடம் உடைத்தவர், தன்னை ஒரு புத்திஜீவியாக காட்டிக் கொள்ளும் சிவில் சமூகப் பிரதிநிதி என மேடைகளிலே பேசி வரும் செல்வின் என்பவர். ஆகவே வரலாறு தொடர்ந்து துரோகிகளை தியாகியாக்குகின்றது, தியாகிகளை துரோகியாக்குகின்றது. காலக் கண்ணாடிக்கு முன் இந்தப் பட்டத்தை வழங்குபவர்கள் தங்களை யார் என்று கேட்டுக் கொள்ளாத வரைக்கும் இந்த பட்டங்கள் தொடர்ந்து வழங்கப்பட்டு கொண்டே இருக்கும். யாரை, யாருக்கு, யார் துரோகி என்பது, யார் தியாகி என்பது, அதைக் காலம்தான் தீர்மானிக்கின்றது.

மரண வீட்டிலே ஒருவருடைய மரணத்திற்கு சிலர்தான் காரணம் என பதாதை வைப்பது என்பது அயோக்கியத்தனத்தின் அதியுச்சமான போக்கிலித்தனம். உட்கட்சியிலே பல பிரச்சினைகள் உண்டு. சேனாதிக்கு பலர் வளர்த்த கடா மார்பில் பாய்வது போல் பாய்ந்துள்ளனர். அதில் மாற்றுக் கருத்துக்கு இடமே இல்லை. ஆனால் ஒரு மரணத்தில் மலிவான அரசியல் செய்வதுதான் தமிழர்களின் செத்த வீட்டு அறமா என்ற கேள்வி எழுகிறது.

பிறப்பு முதல் இறப்பு வரை பண்பாட்டியல் மரபில் அறத்தை பின்பற்றுகின்ற சமூகம், சில்லறைத்தனமாகச் சிந்தித்து, பிற்போக்குத்தனமான செயற்பாடுகளில் ஈடுபடுவது என்பது மனித நாகரிகத்துக்கு உகந்தது அல்ல. இதில் அவர்களால் குற்றம் சாட்டப்பட்ட பதாதையில் படமிட்டு பெயரிடப்பட்டவர்கள் கட்சியில் செய்தது சரியா, தவறா என்பது எமது வாதம் அல்ல. அது அவர்களின் உள்கட்சில் பிரச்சனை. அதை மரண வீட்டில் மலினமான அரசியலாக்க முற்பட்டதுதான் தவறான விடயம்.

இனத்திற்காகப் போராடியவரின் – வாழ்நாள் முழுவதும் தன்னை அர்ப்பணித்தவரின் – மறைவை, ஒரு சிலரின் குறுகிய சிந்தனையினால் ஒரு சாதாரண குடும்பத்தின் இறப்பு வீடாக மாற்றிவிட்டார்கள் என்பதுதான் மாவை சேனாதிராஜாவை விசுவாசித்தவர்களின் ஆதங்கமாக உள்ளது.

இதில் சிறிதரன் தலைமையேற்று நடத்தியவர்.

தொடர்ச்சி▼



# செத்த விட்டு அரசியல்

தொடர்ச்சி▲

தனது தலைமைத்துவப் பண்பை வெளிக்காட்டி இருக்க வேண்டும்.

ஒரு தலைவருக்குரிய உயரிய நிலையில் இருந்து இந்தச் சிறுமைத்தனங்களை எல்லாம் தானே முன் நின்று களைந்து, எல்லோரையும் அழைத்து, இந்த இறப்பு வீட்டை அவருடைய கடந்த கால செயல்களுக்குப் பெருமைப்படுத்தி, கட்சி அலுவலகம், தந்தை செல்வா சதுக்கம் போன்ற இடங்களுக்கு கொண்டு சென்று, அவருடைய புகழுடலுக்குப் பெருமை சேர்த்திருக்க வேண்டும்.

கட்சியில் ஏலவே உள்ள பிளவுகள், முரண்பாடுகளுக்கும் ஒரு தீர்வாக அது அமைந்திருக்கும். ஆனால் அதை சிறிதரன் முன்னெடுக்கவில்லை. ஏட்டிக்குப் போட்டி அரசியல் செய்தார்களே தவிர, இறந்தவரின் கடந்த கால செயல் பற்றியோ, ஒரு இறப்பு வீட்டில் எல்லோரையும் எப்படி அனுசரித்துப் போக வேண்டும் என்கின்ற தமிழர் பாரம்பரியத்தைப் பற்றியோ சிந்திக்கவில்லை.

இவற்றைக் கடந்து, ஓர் அரசியல் கட்சியாகக் கருத்தியல் நிலைப்பாட்டோடு கட்சியாக எப்படித் தீர்மானிக்கலாம், செயல்படுத்தலாம், மதிப்பளிக்கலாம் என்கின்றவற்றை முன் உணர்ந்து செயல்படுத்தி இருக்க வேண்டும். அவ்வாறு செயல்பட்டிருந்தால் அந்தக் கட்சிக்குத் தலைமை தாங்குகின்ற தார்மீக தகுதி ஏற்பட்டிருக்கும். அந்த வாய்ப்பை அவர் நழுவ விட்டு விட்டார்.

சம்பந்தனைத் துரோகி ஆக்கிவினார்கள். சேனாதியைக் கையாலாகாதவர் ஆக்கிவிட்டார்கள். அடுத்து தமிழரசு கட்சியின் எதிர்காலம் என்னவென்று தெரியாமல் தள்ளாடுகிறது. இந்த மலினமான செத்த வீட்டு அரசியல் குறித்து சந்தி சிரிக்கிறது.

சேனாதி உயிரோடு இருந்திருந்தால் இப்படி ஒரு நிலை எவருக்கும் ஏற்பட இடம் அளித்திருக்க மாட்டார். செத்த வீட்டிலே இப்படி அரசியல் செய்தவர்கள், தமிழ் மக்களின் இன விடுதலையிலே இவர்கள் எப்படி மூன்றாம் தர அரசியல் செய்வார்கள் என்பதற்கு இதை விட வேறு என்ன உதாரணம் வேண்டும்? இனியும் இவர்களைத் தமிழ் மக்கள் நம்பப் போகிறார்களா? இந்தச் செத்த வீட்டுக் கறையை இவர்கள் எப்படித்தான் கரைக்கப் போகிறார்களோ தெரியவில்லை.

காலம் கனதியாகப் பதிவு செய்திருக்கும் – மரணத்தில் மகிழ்ந்தவர்களை. பாவம் இவர்களுக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்கள்.

## முன்பதிவு செய்யப்பட்ட வாகனங்கள் மாத இறுதியில் நாட்டை வந்தடையும்

கொள்முதல் செய்யப்பட்ட முதலாவது வாகனத் தொகுதி எதிர்வரும் 25 முதல் 27 ஆம் திகதிக்குள் நாட்டை வந்தடையுமென இலங்கை வாகன இறக்குமதியாளர்கள் சங்கத்தின் தலைவர் பிரசாத் மானகே தெரிவித்துள்ளார்.

முதல் கட்டத்தில் 1000 வாகனங்களை கொண்டுவர திட்டமிடப்பட்டுள்ளதாக அவர் குறிப்பிட்டார்.

வாகனங்களை இறக்குமதி செய்வதற்கான கடன் பத்திரங்கள் ஏற்கனவே திறக்கப்பட்டுள்ளன என அவர் கூறினார்.



மார்ச் இரண்டாம் வாரமளவில் இரண்டாவது வாகன தொகுதி நாட்டை வந்தடையுமென இலங்கை வாகன இறக்குமதியாளர்கள் சங்கத்தின் தலைவர் தெரவித்தார்.

அதன் பின்னர் அனைத்து வகையான புதிய வாகனங்களும் நாட்டில் கிடைக்குமென அவர் தெரிவித்துள்ளார் .

# ஈரோடு கிழக்கு இடைத்தேர்தலில் தி.மு.க. அமோக வெற்றி பெற்றது







ஈரோடு கிழக்கு இடைத்தேர்தலில் தி.மு.க. வேட்பாளர் வி.சி. சந்திரகுமார் 91,558 வாக்குகள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றுள்ளார். நாதக வேட்பாளர் சீதாலட்சுமி 24,151 வாக்குகள் பெற்றுள்ளார். சீதாலட்சுமி உள்பட 45 வேட்பாளர்கள் கட்டுப் பணத்தை இழந்துள்ளனர்.

ஈரோடு கிழக்கு தொகுதி இடைத் தேர்தலில் பதிவான வாக்குகள் எண்ணும் பணி நேற்று காலை தொடங்கி நடைபெற்று வந்தது. முதலில் தபால் வாக்குகளையும், அதனைத் தொடர்ந்து மின்னணு இயந்திரத்தில் பதிவான வாக்குகளையும் எண்ணும் பணி நடந்தது. 17 சுற்றுகளாக வாக்கு எண்ணிக்கை நடைபெறும் எனக் கூறப்பட்டிருந்தது.

ஆனால், பழுதான மூன்று இயந்திரங்களில் பதிவான வாக்குகள் மூன்று சுற்றுகளாக எண்ணப்பட்டு மொத்தம் 20 சுற்றுகள் வாக்கு எண்ணிக்கை நடைபெற்றது. 20 சுற்றுகள் முடிவில் தி.மு.க. வேட்பாளர் 1,15,709 வாக்குகள் பெற்று வெற்றி பெற்றார். 74.7 சதவீத வாக்குகளை அவர் பெற்றார்.

ஈரோடு கிழக்கில் பதிவான, செல்லத்தக்க 1,54,990 வாக்குகளில், 16.7 சதவீதம், அதாவது 25,883 வாக்குகள் பெற்றால் நாம் தமிழர் வேட்பாளர் கட்டுப் பணம் பெற முடியும். இந்நிலையில், 20 சுற்றுகள் முடிவடைந்த நிலையில், நாதக வேட்பாளர் சீதாலட்சுமி 24,151 வாக்குகளை மட்டுமே பெற்றார். 15.59 வீத வாக்குகளை நாதக வேட்பாளர் பெற்றார்.

ஈரோடு கிழக்கு தொகுதி எம்.எல்.ஏ.வாக இருந்த ஈ.வி.கே.எஸ். இளங்கோவன் மறைவைத் தொடர்ந்து, இத்தொகுதிக்கு இடைத்தேர்தல் அறிவிக்கப்பட்டது. இத்தேர்தலை அ.தி.மு.க, பா.ஜ.க, தே.மு.தி.க, த.வெ.க. உள்ளிட்ட கட்சிகள் புறக்கணித்த நிலையில், இண்டியா கூட்டணி சார்பில் திமுக வேட்பாளர் வி.சி. சந்திரகுமார், நாம் தமிழர் கட்சியின் சார்பில் மா.கி.சீதாலட்சுமி, பதிவு செய்யப்பட்ட அரசியல் கட்சிகளின் சார்பில் 13 வேட்பாளர்கள் மற்றும் 31 சுயேச்சை வேட்பாளர்கள் என மொத்தம் 46 வேட்பாளர்கள் போட்டியிட்டனர்.

ஈரோடு கிழக்கு தொகுதி இடைத் தேர்தல் வாக்குப்பதிவு கடந்த பெப்ரவரி 5 ஆம் திகதி நடந்தது. இத்தேர்தலில் 2 லட்சத்து 27 ஆயிரத்து 546 வாக்காளர்கள் வாக்களிக்க வசதியாக, 53 இடங்களில் 237 வாக்குச்சாவடி மையங்கள் அமைக்கப்பட்டு இருந்தன.

இடைத்தேர்தல் வாக்குப்பதிவு நிறைவில், 74 ஆயிரத்து 260 ஆண்கள், 80 ஆயிரத்து 376 பெண் வாக்காளர்கள், 21 மூன்றாம் பாலினத்தவர் என மொத்தம் 1 லட்சத்து 54 ஆயிரத்து 657 வாக்காளர்கள் வாக்களித்தனர். வாக்குப்பதிவு சதவீதம் 67.97. இத்துடன், தபால் வாக்குகள், 85 வயதுக்கு மேற்பட்டோர், மாற்றுத்திறனாளிகள் என, 246 பேரும், இராணுவத்தில் பணி செய்யும் 4 பேர், சிறையில் உள்ள, ஒருவர் என 251 வாக்குகள் பதிவானது.

வாக்குப்பதிவு முடிந்ததும் மின்னணு வாக்குப்பதிவு இயந்திரங்கள், வாக்கு எண்ணும் மையமான சித்தோடு அரசு பொறியியல் கல்லூரிக்கு கொண்டு செல்லப்பட்டது. வாக்கு எண்ணும் மையத்தில் 76 கண்காணிப்பு கேமராக்கள் பொருத்தப்பட்டு தீவிரமாக கண்காணிக்கப்பட்டதோடு, துணை இராணுவத்தினர் உட்பட 4 அடுக்கு பாதுகாப்பு போடப்பட்டு இருந்தது. வாக்கு எண்ணிக்கை அசம்பாவிதங்கள் இன்றி அமைதியாகவே நடந்தது.

# டில்லியில் பா.ஜ.கவுக்கு நல்லாட்சிக்கான வெற்றி!

## பிரதமர் மோடி கருத்து



டில்லி சட்டப்பேரவைத் தேர்தலில் வெற்றி பெற்று பா.ஜ.க. ஆட்சி அமைக்க உள்ள நிலையில், இது வளர்ச்சிக்கு, நல்லாட்சிக்கு கிடைத்த வெற்றி என்று பிரதமர் நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.

டில்லி சட்டப்பேரவைத் தேர்தலில் மொத்தமுள்ள 70 தொகுதிகளில் நேற்று மாலை 4 மணி நிலவரப்படி 35 தொகுதிகளில் வெற்றி, 13 தொகுதிகளில் முன்னிலை என பா.ஜ.க. 48 தொகுதிகளை கைப்பற்றியது. ஆளும் ஆம் ஆத்மி கட்சி 16 தொகுதிகளில் வெற்றி 6 தொகுதிகளில் முன்னிலை என 22 தொகுதிகளை கைப்பற்றும் நிலையில் உள்ளது. காங்கிரஸ் கட்சி ஒரு தொகுதியிலும் முன்னிலை வகிக்கவில்லை.

டில்லியில் பா.ஜ.க. ஆட்சி அமைப்பதற்கான வாய்ப்பு உருவாகி உள்ளதை அடுத்து, பிரதமர் நரேந்திர மோடி வெளியிட்டுள்ள எக்ஸ் பதிவுகளில்,

“மக்கள் சக்தியே முதன்மையானது. பா.ஜ.கவுக்கு வரலாற்று சிறப்பு மிக்க வெற்றியை அளித்த டில்லியில் உள்ள எனது சகோதர சகோதரிகள் அனைவருக்கும் எனது வணக்கமும் வாழ்த்துக்களும். இந்த ஆசிர்வாதங்களைப் பெறுவதில் நாங்கள் பணிவும் பெருமையும் அடைகிறோம். நீங்கள் எனக்கு அளித்த ஏராளமான ஆசிர்வாதங்களுக்கும் அன்புக்கும் உங்கள் அனைவருக்கும் நான் மிகவும் நன்றியுள்ளவனாக இருக்கிறேன்.

டில்லியின் முழுமையான வளர்ச்சியை உறுதி செய்வதற்கும் அதன் மக்களின் வாழ்க்கையை மேம்படுத்துவதற்கும் நாங்கள் அனைத்து முயற்சிகளையும் மேற்கொள்வோம். எதையும் விட்டுவிட மாட்டோம். இதுவே எங்கள் உத்தரவாதம். இதனுடன், வளர்ந்த இந்தியாவை உருவாக்குவதில் டில்லி முக்கிய பங்கு வகிப்பதையும் நாங்கள் உறுதி செய்வோம். மக்களின் இந்த மகத்தான ஆணையை பெறுவதற்காக இரவும் பகலும் உழைத்த எனது அனைத்து பா.ஜ.க. தொண்டர்களையும் நினைத்து நான் மிகவும் பெருமைப்படுகிறேன். இப்போது நாம் நமது டெல்லி மக்களுக்கு இன்னும் வலிமையுடன் சேவை செய்வதில் அர்ப்பணிப்புடன் இருப்போம்.” என்று குறிப்பிட்டுள்ளார்.

# அலஸ்காவில் விமானத்தில் பயணித்த 10 பேரும் பலி

அமெரிக்காவின் அலஸ்கா மாகாணம் உனலக்ளீட் விமான நிலையத்தில் இருந்து நோம் நகருக்கு சென்ற செஸ்னா 208 பி என்ற விமானம் மாயமாகியிருந்த நிலையில், விமானம் கண்டுபிடிக்கப்பட்டுள்ளதுடன் அதில் பயணித்த 10 பேரும் உயிரிழந்துள்ளனர்.





பெரிங் ஏர்லைன்ஸ் நிறுவனத்துக்குச் சொந்தமான அந்த விமானத்தில் விமானி உள்பட 10 போர் பயணித்திருந்தனர்.

நார்டன் சவுண்ட் அருகே உள்ள மலைப்பகுதியில் சென்றபோது அங்கு கடும் பனிப்பொழிவு நிலவியதன் காரணமாக விமானத்தை இயக்குவதில் விமானிக்கு சிக்கல் ஏற்பட்டுள்ளது. இதனால் விமானி உடனடியாக கட்டுப்பாட்டு அறையை தொடர்பு கொள்ள முயல்வதற்குள் கட்டுப்பாட்டு அறையுடனான தொடர்பை விமானம் இழந்தது.

இதனையடுத்து கடைசியாக சிக்னல் கிடைத்த இடத்துக்கு மீட்பு படையினர் விரைந்தனர். பின்னர் மாயமான விமானத்தை தேடும் பணி முடுக்கி விடப்பட்டது. மீட்பு படையினருடன் இணைந்து விமானத்தை தேடும் பணியில் உள்ளூர் மக்களும் ஈடுபட்டனர்.

இந்நிலையில், மீட்புப்பணியாளர்கள் ஹெலிக்கொப்டர் மூலம் விமானத்தின் கடைசியாக சிக்னல் வந்த இடத்தில் தேடிக்கொண்டிருந்தபோது அலாஸ்கா கடல் பனியில் விழுந்து நொருங்கி கிடந்ததை கண்டனர்.

இதனால் அவர்கள் இரண்டு மீட்பு நீச்சல்வீரர்களைகீழேஇறக்கிவிசாரணை நடத்தினர். அந்த விமானத்தில் பயணித்த 10 பேரும் உயிரிழந்தனர் என அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். கடந்த 10 நாள்களில் அமெரிக்காவில் அடுத்தடுத்து 2 விமான விபத்து சம்பவங்கள் இடம்பெற்று, 69 பேர் பலியாகினர் என்பது குறிப்பிடத்தக்கது.

# சர்வதேச நீதிமன்றுக்கு எதிராக ட்ரம்ப் பொருளாதாரத் தடை

டொனால்ட் ட்ரம்ப் சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்திற்கு (ICC) எதிராக ஆக்கிரமிப்பு பொருளாதார தடைகளை அங்கீகரிக்கும் ஒரு நிர்வாக உத்தரவில் கையெழுத்திட்டார்.






கடந்த செவ்வாயன்று அமெரிக்க ஜனாதிபதியுடன் பேச்சுவார்த்தை நடத்திய இஸ்ரேலிய பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகுவுக்கு எதிராக பிடியாணை உத்தரவினை முன்னதாக பிறப்பித்ததன் மூலம் ஹேக் நீதிமன்றம் தனது அதிகாரத்தை துஷ்பிரயோகம் செய்துள்ளதாக சுட்டிக்காட்டி இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

ஐ.சி.சி. ஊழியர்கள் மற்றும் அவர்களது உறுப்பினர்கள், அமெரிக்க குடிமக்கள் மற்றும் சில நட்பு நாடுகளின் குடிமக்கள் மீது விசாரணை அல்லது வழக்குத் தொடரும் முயற்சிகளில் ஈடுபட்டதாக உறுதிசெய்தால், அவர்களுக்கு எதிராக சொத்து முடக்கம் மற்றும் பயணத் தடைகளை விதிக்க அமெரிக்க ஜனாதிபதிக்கு பரந்த அதிகாரங்களை இந்த உத்தரவு வழங்குகிறது.

காசாவில் நடந்த போர்க்குற்றங்கள் மற்றும் மனித குலத்திற்கு எதிரான குற்றங்களுக்காக பெஞ்சமின் நெதன்யாகு மற்றும் அவரது முன்னாள் பாதுகாப்பு அமைச்சர் யோவ் கேலன்ட் ஆகியோருக்கு பிடியாணை உத்தரவுகளை பிறப்பிக்கும் கடந்த நவம்பர் மாதம் நீதிமன்றத்தின் முடிவின் பிரதிபலிப்பாக ஐ.சி.சி. க்கு எதிரான இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இஸ்ரேல் பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகு வொஷிங்டனுக்கு வருகை தந்திருந்த நிலையில், இந்த நடவடிக்கையில் ட்ரம்ப் உத்தரவில் கையெழுத்திட்டார்.

ட்ரம்பின் நிர்வாக உத்தரவில், ஐ.சி.சியின் அண்மைய நடவடிக்கைகள் ஒரு ஆபத்தான முன்னுதாரணத்தை அமைத்துள்ளது என்று கூறியது, இது அமெரிக்கர்களை துன்புறுத்தல், துஷ்பிரயோகம் மற்றும் சாத்தியமான கைது" ஆகியவற்றை வெளிப்படுத்துவதன் மூலம் ஆபத்தில் ஆழ்த்துகின்றது.

இந்த மோசமான நடத்தை அமெரிக்காவின் இறையாண்மையை மீறுவதாக அச்சுறுத்துகிறது.

அதேநேரம், அமெரிக்க அரசாங்கம் மற்றும் இஸ்ரேல் உள்ளிட்ட நமது நட்பு நாடுகளின் முக்கியமான தேசிய பாதுகாப்பு மற்றும் வெளியுறவுக் கொள்கை பணிகளை குறைமதிப்பிற்கு உட்படுத்துகிறது என்று சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

ஐ.சி.சியில் அமெரிக்காவோ அல்லது இஸ்ரேலோ உறுப்பு நாடுகளாக இல்லை.

இந்த நிலையில் தனது நிர்வாக உத்தரவில் ட்ரம்ப், ஐ.சி.சியின் அதிகார வரம்பிற்கு தங்கள் பணியாளர்களை உட்படுத்தக்கூடாது என்ற நாடுகளின் முடிவை நீதிமன்றம் மதிக்க வேண்டும் என்றும் குறிப்பிட்டுள்ளார்.

சொத்துக்களை தடுப்பது, ஐ.சி.சி. அதிகாரிகள் மற்றும் அவர்களது குடும்ப உறுப்பினர்களின் அமெரிக்காவுக்குள் நுழைவதை இடைநிறுத்துவது உட்பட ஐ.சி.சியின் மீறல்களுக்கு காரணமானவர்கள் மீது அமெரிக்கா உறுதியான மற்றும் குறிப்பிடத்தக்க விளைவுகளை சுமத்தும் என்றும் ட்ரம்ப் கூறினார்.

ட்ரம்ப் பலமுறை சர்வதேச நீதிமன்றை விமர்சித்துள்ளார்.

மேலும், அவரது முதல் பதவிக் காலத்தில் ஆப்கானிஸ்தானில் அமெரிக்கப் படைகள் போர்க்குற்றம் இழைத்துள்ளதா என விசாரித்து வந்த ஐ.சி.சி. அதிகாரிகள் மீது பொருளாதாரத் தடை விதித்தார்.

அந்தத் தடைகள் முன்னாள் ஜனாதிபதி ஜோ பைடனின் நிர்வாகத்தால் நீக்கப்பட்டன.

ஐ.சி.சி. 2002 இல் நிறுவப்பட்டது – யூகோஸ்லாவியாவின் கலைப்பு மற்றும் ருவாண்டா இனப்படுகொலையை அடுத்து – கூறப்படும் அட்டூழியங்களை விசாரிக்க இந்த அமைப்பு வந்தது.

120 இற்கும் மேற்பட்ட நாடுகள் ரோம் சட்டத்தை அங்கீகரித்துள்ளன – இது ஐசிசியை அமைத்தது – மேலும் 34 நாடுகள் அதில் இணைவதற்கு கையெழுத்திட்டுள்ளன, எதிர்காலத்தில் அவை அங்கீகரிக்கப்படலாம்.

# இன்றைய ராசி பலன்கள் - 09.02.2025

## மேஷம்

இன்று மகிழ்ச்சியான சூழ்நிலை காணப்படும். இன்று எடுக்கும் முக்கிய முடிவுகள் நன்மை அளிக்கும். இன்று அதிர்ஷ்டம் உங்கள் பக்கம் இருக்கும்.

உங்கள் பணியின் தரத்தில் உங்கள் திறமை பிரதிபலிக்கும். நீங்கள் பணியை விரும்பி மேற்கொள்வீர்கள்.

உங்கள் துணையின் உணர்வுகளைப் புரிந்து கொள்வீர்கள். உங்கள் துணையின் விருப்பபடி நடந்து கொள்வீர்கள். அவரும் பதிலுக்கு உங்களுடன் அன்பாய் நடந்து கொள்வார்.

அதிக பணம் சம்பாதிப்பதற்கான வாய்ப்புகள் அதிகம். சேமிப்பதற்கும் சாதகமான வாய்ப்புகள் காணப்படும்.

இன்று உங்களிடம் மன உறுதி காணப்படும். இதனால் உங்கள் ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும்.

## ரிஷபம்

பரபரப்பான நாளாக இருக்கும். உங்கள் வளர்ச்சி குறித்த மகிழ்ச்சி காணப்படும். முக்கிய முடிவுகள் உங்கள் ஆர்வத்தை மேம்படுத்தும்.

பணியிடத்தில்முன்னேற்றகரமானபலன்கள் கிடைக்கும். உங்கள் சக பணியாளர்கள் மற்றும் மேலதிகாரிகளின் ஆதரவைப் பெறுவீர்கள். பணியில் மேம்படுவதற்கான வழியைக் காண்பீர்கள்.

உங்கள் துணையுடனான அன்புப் பிணைப்பு வலுப்பெறும் வகையில் அன்பை வெளிப்படுத்துவீர்கள். நீங்கள் இருவரும் மகிழ்ச்சியான இனிமையான தருணங்களை பகிர்ந்து கொள்வீர்கள்.

நிதி நிலைமை திருப்தி அளிக்கும். நீண்ட கால நிலுவை தொகைகள் உங்கள் கைக்கு வந்து சேரும்.

இன்று ஆரோக்கியம் சிறப்புடன் காணப்படும்.

## மிதுனம்

இன்று பொறுமையாக இருக்க வேண்டும். அனைத்து விஷயங்களிலும் சகஜமாக இருக்க வேண்டும். ஆன்மீக ஈடுபாட்டின் மூலம் ஆறுதல் பெற முடியும்.

இன்று அதிகப் பணிகள் காணப்படும். பணிகளைக் குறித்தநேரத்தில் முடிப்பதை கடினமாக உணர்வீர்கள்.

உங்கள் துணையிடம் உணர்ச்சி வசப்படுவீர்கள். இதனால் உங்கள துணையுடனான உறவின் மகிழ்ச்சி பாதிக்கும்.

இன்று பணப்பற்றாக்குறை காணப்படும். கூடுதல் பொறுப்பு காரணமாக வங்கியிருப்பை சிறப்பாக பராமரிக்க இயலாது.

கணுக்கால்களில் வலி காணப்படலாம்.தகுந்த மருத்துவ சிகிச்சை மூலம் குணம் பெறலாம்

## கடகம்

ஆன்மீக காரியங்களில் ஈடுபடுவதற்கு உகந்த சூழ்நிலை காணப்படும். அதன் மூலம் சிறப்பாக உணர்வீர்கள். உங்களுக்கு சாதகமாக நிகழ்வுகள் அமைய திட்டமிட்டு செயலாற்ற வேண்டும்.

உங்களின் அஜாக்கிரதை காரண–மாக பணியில் தவறு செய்வீர்கள். உங்கள் மேலதிகாரிங்களின் நன்மதிப்பை பெற நீங்கள் கவனமாக பணியாற்ற வேண்டும்.

உங்கள துணையிடம் சகஜமாகப் பேசுவீர்கள். இதனால் உங்கள் கருத்துக்களை வெளிபடையாக கூற இயலும். இதனால் நல்லுறவு உருவாகும்.

பொருளாதார பாதுகாப்புக்காக நீங்கள் போதிய அளவு பணம் சேமிக்க வேண்டும். பண வரவு குறிப்பிடும் வகையில் காணப்படாது.

## சிம்மம்

இன்று உங்களுக்கு மிகவும் சாதகமான நாள். நீங்கள் சுமூகமாகச் செயல்பட வேண்டும். வாழ்க்கையின் சரியான மற்றும் தவறான விஷயங்களை பிரித்தறிய வேண்டும்.

உங்களின் கடின உழைப்பிற்கு உங்கள் மேலதிகாரிகளிடம் நற்பெயர் பெறுவீர்கள். உங்கள் பணிகளை திறமையாக மேற்கொள்வீர்கள்.

உங்கள் இனிமையான வார்த்தை மூலம் உங்கள் துணையை மகிழ்விப்பீர்கள். இதனால் நல்ல புரிந்துணர்வு ஏற்படும்.

இன்று நிதிநிலைமை சுதந்திரமாக காணப்படும். இதனால் உங்களிடம் போதிய பணம் காணப்படும்.

உங்களிடம் காணப்படும் மன உறுதி காரணமாக இன்று நீங்கள் முழு ஆரோக்கியத்துடன் இருப்பீர்கள்.

## கன்னி

இன்று முன்னேற்றமான நாள். எதிர்காலம் பற்றிய பரந்த நோக்கு கொண்டிருப்பீர்கள். உங்கள் இலக்குகளில் வெற்றி பெறக் கடினமாக உழைப்பீர்கள். இடையில் ஏற்படும் தடைகளை முறியடிப்பீர்கள்.

இன்று பலன் எதையும் எதிர்பார்க்காமல் பணியாற்றுங்கள். இதன் மூலம் குறித்த நேரத்தில் பணிகளை முடித்து தர இயலும். உங்கள் மேலதிகாரிகளின் பாராட்டைப் பெற முடியம்.

உங்கள் துணையிடம் நேர்மையாக விசுவாசமாக இருப்பீர்கள். இதனால் உறவில் நல்லிணக்கம் காணப்படும்.

இன்று பணம் அபரிமிதமாக காணப்படும். இன்று வங்கியிருப்பை நல்ல முறையில் பராமரிப்பீர்கள்.

இன்று ஆரோக்கியம் சிறப்பாக காணப்படும்.

## துலாம்

இன்று குழப்பமான எண்ணங்கள் காணப்படும். இதனால் நீங்கள் கட்டுப்பாட்டை இழப்பீர்கள். பிரார்த்தனை மேற்கொள்ளுங்கள். பக்திப் பாடல்கள் கேட்பதன் மூலம் மன ஆறுதல் பெறலாம்.

பணியிடத்தில் கடினமான சூழ்நிலையை சந்திப்பீர்கள். பணியில் உயர்வு காண திட்டமிட்டு பணியாற்ற வேண்டும்.

உங்கள் துணையிடம் நீங்கள் உணர்ச்சி வசப்படுவீர்கள். இது உறவின் அம்சத்தை பாதிக்கும்.

இன்று பண வரவு செலவு இரண்டும் இணைந்து காணப்படும். குடும்ப நலனுக்காக பணம் செலவு செய்வீர்கள்.

அஜீரணக் கோளாறு மற்றும் கால் வலி காணப்படலாம். ஆரோக்கியத்தில் கவனம் தேவை.

## விருச்சிகம்

இன்று வெற்றி பெறுவதற்கு தைரியமும் உறுதியும் தேவை. உங்கள் இலக்குகளை அடைய இவற்றை நீங்கள் வளர்த்துக் கொள்ள வேண்டும்.

பணியில் நற்பலன் காண கவனமாக பணியாற்ற வேண்டும். நீங்கள் பணியில் தவறு செய்ய நேரலாம். உங்கள் பணிகளை முடிப்பதை கடினமாக உணர்வீர்கள்.

உங்கள் துணையுடன் தொடர்பு கொள்வதில் சிக்கல்கள் காணப்படும். இதனால் உங்கள் துணையுடன் கருத்து வேறுபாடு காணப்படும். நட்பான அணுகுமுறை மேற்கொள்ள வேண்டும்.

இன்று பணப்பற்றாக்குறை காணப்படும். இது உங்களுக்கு வருத்தம் அளிக்கும். இன்று கூடுதல் செலவு காணப்படும். இது தேவையற்ற செலவாக இருக்கும்.

# இன்றைய ராசி பலன்கள் - 09.02.2025




இன்று உங்கள் முயற்சி மூலம் நன்மையான விஷயங்களைப் பெறு வீர்கள். சிறந்த அதிர்ஷ்டத்தை நீங்கள் எதிர்பார்க்கலாம். முக்கிய முடிவுகள் நன்மை அளிக்கும்.

பணியிடத்தில் முன்னேற்றகரமான பலன்கள் காணப்படும். உங்கள் மேலதிகாரிகளிடம் நல்ல பெயரெடுப்பீர்கள்.

உங்கள் துணையுடன் இனிமையான உணர்வு களை பகிர்ந்து கொள்வதன் மூலம் இன்றைய நாளை நீங்கள் இனிமையாக ஆக்கலாம். இந்த மகிழ்ச்சி யின் காரணமாக உங்கள் இருவரிடையே நெருங்கிய பிணைப்பு ஏற்படும்.

இன்று கணிசமான பண வரவு காணப்படும். உங்கள் சேமிப்பு நிலை உயரும் வாய்ப்பு உள்ளது.




இன்று எழும் வேறுபாட்டை தீர்க்க பக்குவமான அணுகுமுறை மேற் கொள்ள வேண்டும். மாறுபடும் சூழ் நிலைகேற்ப இன்று நடந்து கொள்ள வேண்டியது அவசியம்.

உங்கள் பணியில் நீங்கள் சிறிது போராட்டங்களை சந்திக்க வேண்டியிருக்கும். பணிகள் அதிகமாக இருக்கும். இது உங்களுக்கு கவலையை அளிக்கும்.

உங்கள் துணையிடம் நீங்கள் உணர்ச்சி வசப்படு வீர்கள். உறவில் மகிழ்ச்சியை தக்க வைக்க இத்தகைய உணர்வுகளை தவிர்க்க வேண்டும்.

பண வரவு குறைந்து காணப்படும். பணத்தை விழிப் புடன் கையாள வேண்டும்.

கண் எரிச்சல் காணப்படும். இது உங்களுக்குக் கவலை அளிக்கும். அஜீரணக் கோளாறு காணப்படும்.




இன்று சில விஷயங்களை நீங்கள் விட்டுக்கொடுக்க வேண்டியிருக்கும். தேவையற்ற கவலைகள் காணப்படும். இதனால் மனக்குழப்பம் ஏற்படும்.

அதிக வேலைகள் உங்களுக்கு கவலையை உண்டாக்கும். நீங்கள் சிறப்பாக பணியாற்ற திட்டமிட்டு செயலாற்ற வேண்டும்.

உங்கள் துணையுடன் நட்பாக நடந்துகொள்ள வேண்டும். நல்ல புரிந்துணர்வுக்கு இது மிகவும் அவசியம்.

பண வரவு குறைந்து காணப்படும். வரவு செலவு இரண்டும் இணைந்து காணப்படும். இது உங்களுக்கு கவலை அளிக்கும்.

நேர்மறையான எண்ணங்கள் காரணமாக உங்கள் மன ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும். இந்த மன் நிலை உங்களை ஆரோக்கியமாக வைத்திருக்கும்.




இன்று முக்கிய நிகழ்வுகளை தவிர்க்க வேண்டும். இன்று உங்களிடம் அமைதியின்மை மற்றும் பாதுகாப் பின்மை உணர்வு காணப்படும். உணர்ச்சி வசப்படுவதைத் தவிர்க்க வேண்டும். பிரார்த்தனையில் ஈடுபடு வதன் மூலம் ஆறுதல் பெறலாம்.

இன்று பணிகள் அதிகமாக காணப்படும். பணிகளை குறித்த நேரத்தில் முடிக்க இயலாது. பணிகளை நேரத் தோடு முடிக்க திட்டமிட்டு பணியாற்ற வேண்டும்.

நீங்கள் பொறுமையான அணுகுமுறை மேற் கொள்ள வேண்டும். நீங்கள் உங்கள் துணையுடன் சிறிது வன்மையாக உணர்வுகளை வெளிப்படுத்துவீர்கள். உறவில் நல்லிணக்கம் தக்க வைக்க இந்த உணர்வை தவிர்க்க வேண்டும்.






# வேலையற்ற பட்டதாரிகள் சங்கம் திருகோணமலையில் கவனவீர்ப்பு

(முஹம்மட் றிஸ்னாத்)

திருகோணமலையில் உள்ள கிழக்கு மாகாண ஆளுநர் அலுவலகத்திற்கு முன்னால் வேலையற்றப் பட்டதாரிகள் சங்கத்தினர் நேற்றய் சனிக்கிழமை காலை கவனவீர்ப்பு ஆர்ப்பாட்டத்தை முன்னெடுத்தனர்.

'அரசே! அனைத்துப் பட்டதாரிக ளுக்கும் பாரபட்சம் இன்றி தொழிலை வழங்கு!' என வலியுறுத்தி இந்தக் கவனவீர்ப்பு ஆர்ப்பாட்டம் முன்னெடுக் கப்பட்டது.




இதன்போது, 'அனைத்துப் பட்ட தாரிகளுக்கும் பாரபட்சம் இன்றி தொழிலை வழங்கு!', 'வேலை இல்லை என்றால் பல்கலைக்கழகம் எதற்கு?', 'வரவு – செலவு திட்டத்தில் 35,000 வேலைவாய்ப்பை பட்டதாரிகளுக்கு வழங்குவதை உறுதி செய்!', 'படித்துப் பட்டம் பெற்றும் பதவி இல்லை!', 'வேண டாம், வேண்டாம், போட்டிப் பரீட்சைகள் வேண்டாம்!' என்பன்ச் உள்ளிட்ட வாசகங்கள் அடங்கிய பதாகைகளை ஏந்தியவாறு கோஷங்களை எழுப் பியவாறும் இந்த ஆர்ப்பாட்டத்தை அவர்கள் முன்னெடுத்தனர்.






# சமையல் கலையின் மகத்துவத்தை கொண்டாடும் Nestle Professional

சர்வதேச தொழில்சார் சமையல் கலைஞர்கள் தினக் கொண்டாட்டங்களுக்கு வலுவூட்டுவதற்காக, Nestlé Professional Sri Lanka மற்றும் Chefs Guild of Lanka ஆகியன அண்மையில் கைகோர்த்துள்ளன. வோட்டர்ஸ் எட்ஜில் இடம்பெற்ற நிகழ்வில், 500 வரையான Executive Chefs, Executive Sous Chefs மற்றும் Executive Pastry Chefs உள்ளிட்ட தொழில்சார் சமையல் கலைஞர்கள் பங்கு பற்றியுள்ளதுடன், நாடெங்கிலுமுள்ள 154 ஹோட்டல்க ளிலிருந்து மிகத் திறமையான சமையல் கலைஞர்களை இந்நிகழ்வு ஒன்றுதிரட்டியிருந்தது.

இலங்கையில் சமையல் கலையில் நிபுணத்துவம் பெற்றுள்ளவர்களுக்கு அங்கீகாரமளித்து, வெகுமதியளிப் பதற்கான வாய்ப்பினை இந்நிகழ்வு Nestlé Professional இக்கு வழங்கியுள்ளதுடன், Chefs Guild of Lanka உட னான அதன் நீண்ட கால கூட்டாண்மைக்கும் மீண்டும் வலுவூட்டியுள்ளது. நாட்டில் தொழில்சார் சமையல் துறைக்கு கடந்த பல ஆண்டுகளாக நெஸ்லே நிறுவனம் ஆற்றியுள்ள கணிசமான பங்களிப்புக்களை அங்கீகரிக்கும் வகையில், நெஸ்லே லங்கா நிறுவனத்தின் முகாமைத்துவப் பணிப்பாளர் பேர்ணி ஸ்டெஃபான் Chefs Guild of Lanka ஆல் வாழ்நாள் கௌரவ உறுப்புரிமை வழங்கி கௌரவிக்கப்பட்டுள்ளார்.

மேலும், ஊாநகள புரடைன ழுக டுயமெய மற்றும் Sri Lanka Hospitality Graduates Association ஆகியவற்றின் ஒத்துழைப்புடன் நாடளவிய சமையல் கலைப் போட்டி யான 'Nestlé Golden Chef's Hat competition 2025 என்பதையும் இந்நிகழ்வில் Nestlé Professional ஆரம் பித்து வைத்துள்ளது. விருந்தோம்பல் துறையில், வளர்ந்து வரும் சமையல் கலை நிபுணர்களை வளர்த்து, அங்கீகார மளிக்கும் நோக்கத்துடன் இந்த முயற்சி ஆரம்பிக் கப்பட்டுள்ளது.















# யூனியன் அஷ்யூரன்ஸ் பாங்கதூரன்ஸ் MDRT தகைமையாளர்களை கௌரவிக்கும் நிகழ்வு

இலங்கையின் முன்னணி ஆயுள் காப்புறுதி சேவைகளை வழங்கும் யூனியன் அஷ்யூரன்ஸ், தனது MDRT-தகைமை பெற்ற காப்புறுதி உறவுபேண் அதிகாரிகளின் (IROs) சிறந்த சாதனைகளை அண்மையில் பத்தரமுல்ல, வோட்டர்ஸ் எட்ஜ் ஹோட்டலில் கொண்டாடியது.

The Million Dollar Round Table (MDRT) என்பது, காப்புறுதி ஆலோசகர்களுக்கு உலகளாவிய ரீதியில் வழங்கப்படும் அதியுயர் கௌரவிப்பாக அமைந்திருப்பதுடன், உயர் ஒழுக்க நியமங்களை பேணுவதுடன், பங்காளர்களுடன் நம்பிக்கை கட்டியெழுப்பும் வகையில் தொடர்ந்தும் செயலாற்றுவது மற்றும் வாடிக்கையாளர்களுக்கு சிறந்த காப்புறுதி தீர்வுகளைப் பெற்றுக் கொடுப்பது போன்ற சிறந்த செயற்பாடுகளை கௌரவித்து இந்த அந்தஸ்த்து வழங்கப்படுகின்றது.

இந்நிகழ்வில் பிரதான உரையை ஆற்றிய சுதீர கொடபத்தகே உடனான அறிவு பகிர்வு அமர்வும் அடங்கியிருந்தது. பங்கேற்றிருந்தவர்களுக்கு தமது நிலையில் முன்னேறுவதற்கு அவசியமான பெறுமதியான தகவல்கள், நுட்பங்கள் மற்றும் மூலோபாயங்களை வழங்கியிருந்தார். நிகழ்வின் மற்றுமொரு பிரதான அங்கமாக, சிறப்பாக செயலாற்றியிருந்த காப்புறுதி உறவுபேண் அதிகாரிகளுக்கு விருதுகள் வழங்கி, அவர்களின் சிறந்த பங்களிப்புகள் கௌரவிக்கப்பட்டிருந்தது.

அணியினரின் வெற்றிகரமான செயற்பாடு தொடர்பில் யூனியன் அஷ்யூரன்ஸ் பிரதம பங்காண்மை விநியோக அதிகாரி வத்சலா அளுத்கெதர கருத்துத் தெரிவிக்கையில்,

"யூனியன் அஷ்யூரன்ஸில், சிறப்புக்கான சூழலை கட்டியெழுப்புவதில் எம்மை அர்ப்பணித்துள்ளதுடன், எமது காப்புறுதி உறவு அதிகாரிகளை அவர்களின் முழுமையான ஆற்றலை எய்தச் செயற்வதற்கு வலுவூட்டுகின்றோம். MDRT தகைமையை பெற்ற அங்கத்தவர்களை கௌரவிக்கும் நிகழ்ச்சி என்பது, சிறந்த சாதனைகளின் பிரதிபலிப்பு மற்றும்



எமது வாடிக்கையாளர்களுக்கு அவர்கள் பெற்றுக் கொடுக்கும் பெறுமதியையும் உணர்த்துவதாக அமைந்துள்ளது.

அவர்களின் வளர்ச்சி மற்றும் வெற்றிகரமான செயற்பாடுகளுக்கு நாம் தொடர்ந்தும் ஆதரவளிப்பதுடன், தொழிற்துறையிலும், நிறுவனத்தினுள்ளும் அவர்களின் தொடர்ச்சியான வளர்ச்சியை காண ஆவலாக உள்ளோம். நிறுவனம் எனும் வகையில் வாடிக்கையாளர்களுக்கு உயர்ந்த மட்ட சேவைகளைப் பெற்றுக் கொடுத்து, தமது தொழில் வாழ்வில் தொடர்ந்தும் வெற்றிகரமாக இயங்குவதற்கு அவசியமான பயிற்சிகளையும் வளங்களையும் அவர்களுக்கு நாம் பெற்றுக் கொடுப்போம்." என்றார்.

கொழும்புப் பங்குப்பரிவர்த்தனையில் பட்டியலிடப்பட்ட இலங்கையின் மிகப்பெரிய கூட்டுநிறுவனமான, ஜோன் கீல்ஸ் ஹோல்டிங்சின் (ஜே.கே.எச்) அங்கத்துவ நிறுவனமாக யூனியன் அஷ்யூரன்ஸ் திகழ்கின்றது. இது 7 வகையான பரந்துபட்ட தொழில் துறைகளில் 80 இற்கும் அதிகமான நிறுவனங்களைக் கொண்டு இயங்குகின்றது. அதன் அங்கத்துவ நிறுவனமாகத் திகழ்ந்து, துறையில் மூன்று தசாப்த கால வெற்றிகரமான சேவையை யூனியன் அஷ்யூரன்ஸ் பூர்த்தி செய்துள்ளது.




# சுபிரிதனசம்பத ‘டபள் போர்ச்சூன்’ விசேட லொத்தர் சந்தைக்கு அறிமுகம்







கோடிகணக்கில் பரிசுகளைகொண்டுவரும், அதிக பணப்பரிசுகளை அள்ளித்தரும் சுபிரிதனசம்பத லொத்தரின் “டபள் போர்ச்சூன்” விசேட லொத்தரினை சந்தைக்கு வெளியிடல் நிகழ்வு 2025.01.31 ஆம் திகதி அபிவிருத்தி லொத்தர் சபையின் தலைவர் / பிரதம நிறைவேற்று அதிகாரி ஹேமந்த ஸ்வர்ண திலக தலைமையிலும் பொது முகாமையாளர் அநுர ஜயரத்ன உட்படமுகாமைத்துவத்தின் பங்கேற்பில் அபிவிருத்தி லொத்தர் சபை அலுவலகவளாகத்தில் நடைபெற்றது.

இந்த விசேட சீட்டிழுப்பு 2025 பெப்ரவரிமாதம் 28 ஆம் திகதி வெள்ளிக்கிழமை நடைபெறவுள்ளதுடன், இவ் “டபள் போரச்சூன்” விசேட சீட்டிழுப்பின் மூலம் அன்றைய தினத்திற்குரிய சுப்பர் பரிசுப்பொதி மற்றும் இதரபரிசுகளுக்குமேலதிகமாக 06 இலக்கங்களைக் கொண்ட முதல் விசேட இலக்கம் பொருந்துவதன் மூலம் 100,000 ரூபா பணப்பரிசுகள் மற்றும் தெரிவுசெய்யப்படும் 06 இலக்கங்களைக் கொண்ட இரண்டாவது விசேட இலக்கம் பொருந்துவதன் மூலம் 50,000 ரூபா பணப்பரிசுகள் பலவற்றையும் வெல்லமுடியும்,

சுபிரிதனசம்பத “டபள் போர்ச்சூன்” லொத்தர்களை அதிகதிகமாக கொள்வனவு செய்து நீங்களும் அதிகதிகமாக பரிசுகளை வென்றிடுங்கள் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

# டயலொக் EcoMatcher உடன் இணைந்து மரநடுகை திட்டத்தை அறிமுகம்




இலங்கையின் முன்னணி தொலைத்தொடர்பு நிறுவனமான டயலொக் ஆசிஆட்டா, இயற்கையைப் பாதுகாக்கும் புதிய பாதையில் அடியெடுத்து வைக்கிறது.

EcoMatcher உடன் இணைந்து, நாட்டின் முதல் தொழில்நுட்பம் சார்ந்த மரம் நடும் தளத்தை 2025 ஜனவரி முதல் அறிமுகப்படுத்துகிறது.

இந்த அற்புதமான முயற்சியின் மூலம், தனிநபர்களும் நிறுவனங்களும் மீண்டும் காடுகளை உருவாக்குவதிலும், கார்பன் வெளியேற்றத்தைக் குறைப்பதிலும் பங்களிக்க முடியும். நீங்கள் நடும் ஒவ்வொரு மரத்தையும் GPS தொழில்நுட்பம் மூலம் கண்காணிக்கலாம், அதன் வளர்ச்சியைப் படங்களாகப் பார்க்கலாம், உங்கள் பங்களிப்பின் தாக்கத்தை நேரடியாக உணரலாம்.

இலங்கையின்முன்னணிதொலைத்தொடர்புநிறுவனமான டயலொக் ஆசிஆட்டா, உலகின் முன்னணி டிஜிட்டல் மரம் நடும் நிறுவனமான EcoMatcher உடன் இணைந்து, சுற்றுச்சூழலைப் பாதுகாக்கும் புதிய முயற்சியில் களமிறங்கியுள்ளது.

2025 ஜனவரி முதல், நாட்டின் முதல் தொழில்நுட்பம் சார்ந்த மரம் நடும் தளத்தை அறிமுகப்படுத்துகிறது. இதன் மூலம், தனிநபர்கள் மற்றும் நிறுவனங்கள் ஆன்லைனில் மரங்களை நன்கொடையாக வழங்கி, மீண்டும் காடுகளை உருவாக்குவதிலும், கார்பன் வெளியேற்றத்தைக் குறைப்பதிலும் பங்களிக்கலாம்.

EcoMatcher, உலகளாவிய நம்பகமான அறக்கட்டளைகளுடன் இணைந்து, மறுகாடமைப்பு முயற்சிகளில் முழுமையான வெளிப்படைத்தன்மை மற்றும் பொறுப்புணர்வை உறுதி செய்கிறது.

நீங்கள் நடும் ஒவ்வொரு மரத்தையும் GPS தொழில்நுட்பம் மூலம் கண்காணிக்கலாம், அதன் வளர்ச்சியைப் படங்களாகப் பார்க்கலாம், கார்பன் உறிஞ்சலை அளவிடலாம். நிறுவனங்கள் தங்கள் பெயரில் காடுகளை உருவாக்கி, மரங்களைப் பரிசளிக்கலாம், Verra-சான்றளிக்கப்பட்ட கார்பன் கிரெடிட்களைப் பெற்று கார்பன் தடத்தைச் சமன் செய்யலாம் என தெரிவிக்கப்பட்டுள்ளது.







# AIA இன்சூரன்ஸின் AIA ஆரோக்கியமான பாடசாலைகள் திட்டம் 100 ஐ எட்டுகிறது

சர்வதேச கல்வி தினத்தை நினைவுகூரும் வகையில், AIA ஆரோக்கியமான பாடசாலைகள் திட்டத்திற்கான ஒரு குறிப்பிடத்தக்க மைல்கல்லை AIA ஸ்ரீலங்கா அறிவித்துள்ளது.

இலங்கையில் இருந்து மொத்தம் 100 பாடசாலைகள் இந்த மாற்றத்தை ஏற்படுத்தும் உலகளாவிய முயற்சியில் இணைந்துள்ள நிலையில், AIA ஆரோக்கியமான பாடசாலைகள் திட்டம் மாணவர்கள் ஆரோக்கியமான வாழ்க்கை முறைகளைப் பின்பற்றவும், பாடசாலைகள் சமூகங்களுக்குள் நல்வாழ்வு கலாச்சாரத்தை உருவாக்கவும் ஊக்குவிக்கிறது.

இலங்கை முழுவதும் உள்ள ஆரம்ப மற்றும் இடைநிலைப் பாடசாலைகள் www.ahs.aia.com/lk வழியாக பதிவு செய்வதன் மூலம் இந்த திட்டத்தில் பங்கேற்க அழைக்கப்படுகின்றன.

யுஐயு குழுமத்தால் மூன்று ஆண்டுகளுக்கு முன்பு தங்கள் சந்தைகளுக்கு அறிமுகப்படுத்தப்பட்ட இந்த திட்டம், ஒக்டோபர் 2024 இல் இலங்கையில் தொடங்கப்பட்டது, ஒட்டுமொத்த போட்டிக்காக மொத்தம் அ.டொ. 100,000 ஒதுக்கப்பட்டுள்ளது.

மக்கள் ஆரோக்கியமான, நீண்ட மற்றும் சிறந்த வாழ்க்கையை வாழ உதவும் நோக்கத்திற்கான AIA இன் உறுதிப்பாட்டை இந்த திட்டம் எடுத்துக்காட்டுகிறது. கல்வி, நல்வாழ்வு மற்றும் சுகாதாரம் ஆகியவையுடன் ஆழமாகப் பின்னிப்பிணைந்துள்ள இந்தத் திட்டம், இளம் மனங்கள் தங்கள் எதிர்காலத்தை வடிவமைக்கும் வாழ்நாள் முழுவதும் நேர்மறையான பழக்கங்களை ஏற்றுக்கொள்ள ஊக்குவிக்க ஆசிரியர்களுக்கு வளங்களையும் ஆதரவையும் வழங்குகிறது.

பதிவுசெய்யப்பட்ட பாடசாலைகள் காட்டும் உற்சாகமும் அர்ப்பணிப்பும், ஆரோக்கியமான தலைமுறையை உருவாக்குவதற்கான பகிரப்பட்ட தொலைநோக்குப் பார்வைக்கு ஒரு சான்றாகும்.

சர்வதேச கல்வி தினத்தின் கொள்கைகளுடன் இணைந்து, AIA ஆரோக்கியமான பாடசாலைகள் திட்டம், நிலையான வளர்ச்சி மற்றும் சமூக நல்வாழ்வை இயக்குவதில் கல்வியின் அத்தியாவசிய பங்கை அடிக்கோடிட்டுக் காட்டுகிறது. நடைமுறை சுகாதாரம் மற்றும் நல்வாழ்வை பாடத்திட்டத்தில் ஒருங்கிணைப்பதன் மூலம், இன்றைய வேகமான உலகில் சுகாதாரம் மற்றும் நல்வாழ்வின் வளர்ந்து வரும் முக்கியத்துவத்தை நிவர்த்தி செய்வதன் மூலம், மாற்றத்திற்கான ஊக்கிகளாக இருக்க பாடசாலைகளுக்கு இந்த திட்டம் அதிகாரம் அளிக்கிறது.

ஏற்கனவே இயக்கத்தில் இணைந்த 100 பாடசாலைகள் வெளிப்படுத்திய அர்ப்பணிப்பை யுஐயு பாராட்டுகிறது, தங்கள் மாணவர்களுக்கு பிரகாசமான, ஆரோக்கியமான எதிர்காலத்தை வடிவமைப்பதில் அவர்களது அர்ப்பணிப்பை வெளிப்படுத்துகிறது.

AIA ஆரோக்கியமான பாடசாலைகள் திட்டம் பதிவுகளுக்கு திறந்திருக்கும். நாடு முழுவதும் உள்ள பாடசாலைகள் சுகாதாரம் மற்றும் கல்வியை ஒருங்கிணைக்கும் ஒரு தளத்திலிருந்து பயனடைய வாய்ப்பளிக்கிறது. பங்கேற்கும் பாடசாலைகள் மதிப்புமிக்க கல்வி வளங்களை பெறுவது மட்டுமல்லாமல், அவர்களின் முயற்சிகளை மேம்படுத்த அங்கீகாரம் மற்றும் கணிசமான நிதியைப் பெறும் வாய்ப்பையும் பெறுகின்றன.

AIA ஹெல்தியஸ்ட் ஸ்கூல்ஸ், ஆசிரியர்கள் மற்றும் அதிபர்கள் தங்கள் மாணவர்களின் வாழ்க்கையில் உறுதியான நேர்மறையான தாக்கத்தை ஏற்படுத்தும் திட்டங்களை முன்னெடுத்து செயல்படுத்த ஒரு சிறந்த வாய்ப்பாகும், அதே நேரத்தில் அவர்களின் பாடசாலைகளுக்கு உண்மையான மேம்பாட்டை இம்முயற்சி ஏற்படுத்தும்.

AIA ஸ்ரீலங்கா அனைத்து பாடசாலைகளையும் இந்த முன்னோடி முயற்சியில் சேர அழைக்கிறது. பதிவுசெய்து திட்டத்தைப் பற்றி மேலும் அறிய, www.ahs.aia.com/lk தளத்தைப் பார்வையிடுங்கள்.

AIA healthiest schools
AIA සුව පාසල්